# உதயசூரியன்

Uthayasooriyan

උදය සූරියන්

கதிர் : 01 | 10 மார்ச் 2007 | விலை : 10.00


07 JAN

# ஐ.நா செயலாளருக்கு த.வி.கூ தலைவர் கடிதம்

**தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்கள் 30.01.2007 அன்று ஐக்கியநாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்களுக்கு எழுதிய கடிதம்**

எமது இந்த சிறிய தீவில் சுதந்திரம், ஜனநாயகம், அடிப்படை உரிமை, மனித உரிமை மீறல்கள் போன்றவற்றை பற்றி பேசுகின்றோம். இவ்வுரிமைகளை பாதுகாக்க உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புக்களும், நிறுவனங்கள் பலவும் இங்குண்டு. ஒரு விபத்து நடந்து சில நிமிடங்களுக்குள் அவ்விடத்திற்கு பொலிசார் வந்து விடுகின்றனர். ஒரு குற்றமிழைக்கப்பட்டால் சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு பொலிசார் வந்து விடுகின்றனர். அயலவருடன் ஏற்படும் சிறு தகறாறுகளுக்குக் கூட பொலிசார் உடனடி விசாரணையை ஆரம்பித்து விடுகின்றனர். சுருங்கக் கூறின் எமது நாட்டில் நடக்கும் சம்பவங்களை விசாரிக்க, நிவாரணம் தேட பல்வேறு ஸ்தாபனங்களும், நிறுவனங்களும் உண்டு.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்களின் சர்வாதிகார ஆட்சிக்கு கட்டுப்பட்டு அவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யக்கூடிய ஸ்தாபனமின்றி, துணிச்சலுமின்றி தமிழ், பேசும் மக்களில் ஒரு பகுதியினர் வாழ்கின்றனர் என்பது இவ்வுலகில் யாருக்கும் தெரியாது.

அவர்களுடைய முறைப்பாடுகளை ஏற்கவோ, விரைந்து சென்று



அவர்களுக்கு உதவவோ யாரும் இல்லை. அவர்கள் முற்றுமுழுதாக விடுதலைப் புலிகளின் பிடியிலேயே வாழ்கின்றனர். துர்ப்பாக்கியவான்களாகிய இவர்களுடைய குறைபாடுகள் பற்றி தனித்து எனது குரல் மட்டும் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருக்கின்ற போதும் அதை பொருட்படுத்துவார் யாரும் இல்லை.
இவர்கள் அனுபவிக்கும் துன்பம் இரண்டொரு வருடமல்ல. ஏறக்குறைய கால் நூற்றாண்டு காலமாகும். ஆனால், இவர்களுக்கு விமோசனம் இல்லை. போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் வரைக்கும் இம் மக்கள் விரைவில் தமக்கு விடிவுகாலம் ஏற்படும் என்றும் சமாதானமாக, இயல்பு வாழ்க்கைக்கு விரைவில் திரும்புவோம் என்றும் நம்பியிருந்தனர். ஆனால், யுத்த நிறுத்த ஒப்பந்தம் இவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக இவர்களுடைய நம்பிக்கையை சிதறடித்தது மட்டுமல்ல விடுதலைப் புலிகளின் பிடிக்குள் இவர்களை சட்டபு'ர்வமாக தள்ளி விட உதவியது. யுத்த நிறுத்தம் செய்யப்பட்டு ஐந்து ஆண்டுகள் பு'ர்த்தியாகும் இவ்வேளையில் நாளுக்கு நாள் விடுதலைப் புலிகளின் பிடி இறுக்கப்பட்டு புலிகளுடைய கொடூரம் தாங்கமுடியாதளவு உச்சக் கட்ட த்தை அடைந்து விட்டது. இன்று இம் மக்கள் தமது விடுதலைக்காக கூக்குரலிடுவதோடு தம்மை விடுவிப்பவர்களுக்கு முழு ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளனர்.

இன்று நாடு எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சினை விடுதலைப் புலிகளின் கொடுங்கோல் ஆட்சியிலிருக்கும் கிளிநொச்சி. முல்லைத்தீவு மாவட்டங்களிலும் மன்னார், வவுனியா மாவட்டங்களின் சில பகுதிகளிலும் இருக்கும் இவர்களை விடுவிப்பதே. நான் எதையும் மிகப்படுத்தி கூறுவதால் எதையும் அடையப்போவதில்லை. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக உலகின் பல பகுதிகளிலும் செயற்படும் அச்சு ஊடகங்கள் இலத்திரனியல் ஊடகங்கள் என்மீது நிறைய வசை பாடியுள்ளன. என்னைப்பற்றி மிகவும் தரக்குறைவான கட்டுரைகள், பேராசிரியர்களால் கூட எழுதப்பட்டும் கேலிச்சித்திரங்கள் வரையப்பட்டும் பிரசுரிக்கப்பட்டன. "துரோகி", "சு'ழ்ச்சிக்காரன்" என்ற பட்டங்களை வழங்கி என்னை கௌரவித்தனர். இப்படிப்பட்ட வசைகளால் எனக்கு ஏற்பட்ட மனசங்கடங்களையும், உயிராபத்தையும் பொருட்படுத்தாது, 24 ஆண்டு காலமாக பல்வேறு உரிமைகளையும் இழந்து சொல்லமுடியாத துன்பங்களை அடிமைகள் போல் வாழ்ந்து அனுபவித்து வரும் மக்களை விடுவிக்க வேண்டிய புனிதமான பணியை நான் முன்னெடுத்துச் செல்கின்றேன்.
மக்களுடைய வாக்குகளால் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாது தமது முகவர்களாக செயற்படக் கூடிய வகையில் 22 தமிழ் பாராளுமன்ற பதவிகளை மோசடி மூலம் விடுதலைப் புலிகள் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு பெற்றுக் கொடுத்தனர். வடக்கு கிழக்கு மாகாணத்தில் 2001ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் மட்டுமே கடைசியாக நடந்தேறிய குளறுபடியற்ற தேர்தல் ஆகும். அத்தேர்தலில் வெற்றிபெற்ற 09 பேரில் முதலாவது இடத்தைப் பெற்ற நான் தற்போது பாராளுமன்றத்தில் இல்லாத போதிலும் அந்த மக்களுக்காக பேசவேண்டிய கடமைப்பாடு எனக்குண்டு.



சிங்கள மக்கள் தமிழ் மக்களை இனப்படுகொலை செய்வதில் மொத்தமாக ஈடுபட்டுள்ளனர் என பிரபாகரனும் அவரது குழுவினரும் ஈடுபட்டுள்ளனர். என்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. இடைக்கிடை அங்குமிங்கும் சில அசம்பாவிதங்கள் நடப்பதுண்டு. சில சந்தர்ப்பங்களில் யுத்த முனைகளிலும் வேறு சில சந்தர்ப்பங்களில் பதிலடியாகவும் கொடூரமான முறையில் கொலைகள் நடப்பதுண்டு. ஆனால் அவற்றை இனப்படு

தொடர்ச்சி 5ம் பக்கம்

## வாசகர்களுடன் ஒருசில நிமிடங்கள்..

தமிழ்மக்களுக்கு நான் புதியவன் அல்ல. எனது அரசியல் வாழ்வு ஆரம்பித்த நாள்தொடக்கம் இன்று வரை எனது நடவடிக்கைகள் அனைத்தும் எமது மக்களின் நலனுக்காகவே பயன்படுத்தப்பட்டன என்பதை என்னுடன் மிகவும் நெருங்கிப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும். அரசியல் விரோதிகளால் பலவிதமான விமர்சனங்களுக்கு உள்ளானேன். அவற்றில் திட்டமிட்டு தூற்றுவதே முன்னிலை வகித்தது. ஆனால் எதுவித விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்பட வேண்டிய ஓர் அரசியல்வாதியாக நான் செயற்படவில்லை. சிறுவயதில் இருந்தே நாட்டுப்பற்று, இனப்பற்று சமூகத்தொண்டு ஆகியவற்றில் ஈடுபட்டு வந்தேன்.

மகாத்மா காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கையால் கவரப்பட்டவன் நான். தந்தை செல்வாவின் அகிம்சை அடிப்படையில் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, என்றும் பலாத்காரத்தையோ, வன்முறையையோ ஆதரிக்கவில்லை. தந்தையின் இலட்சியங்களுக்கு என்றும் மாறுபட்டு செயற்பட்டவனுமல்ல நான். தந்தை செல்வா காட்டிய வழியே என்வழி. மழைக்கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப்பாயாது என்ற முதுமொழிக்கமைய என்றும் எச்சந்தர்ப்பத்திலும் எத்தகைய தனிப்பட்ட சலுகைகளுக்காகவும், பதவிகளுக்காகவும் நான் விலைபோனவனல்ல. போகின்றவனுமல்ல. உதயசூரியனை மீண்டும் உதிக்க வைப்பேன் என்று கடந்த தேர்தல் காலத்தில் சபதமெடுத்த நான் அச்சபதத்தின் முதற்கட்டமாக, உதய சூரியன் பத்திரிகையை உங்கள் கைக்கு தந்தமை பெரும் மகிழ்ச்சியைத் தரும் என நான் நம்புகின்றேன். மக்களுக்கு சேவை செய்யும் எண்ணத்தில் நான் இடதுசாரிக் கொள்கைகளால் கவரப்பட்டு வந்துள்ளேன் என்பதை மறுப்பதற்கோ அல்லது மறைப்பதற்கோ இல்லை.

எதிரிகள் என்னை விமர்சிப்பது போன்று எந்த ஒரு காலகட்டத்திலும் நான் தமிழ்ப்பேசும் மக்களின் நலனிற்கு எதிராக செயற்பட்டது கிடையாது. இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள், அதனால் தமிழ்ப் பேசும் மக்கள் படும் இன்னல்கள் எல்லாவற்றிற்கும் யார் காரணம் ? எதனால் ஏற்பட்டது? என விமர்சித்து காலத்தை வீணடிப்பதிலும் பார்க்க, எமது மக்களுக்கு தற்போது என்ன தேவை என்பதை மட்டுமே செய்து கொண்டிருக்கின் றேன். எமது மக்கள் படும் துயரங்கள், துன்பங்கள் அனைத்திற்கும் விரைவில் ஒரு விடிவு வேண்டும் என்ற ஒரே இலட்சியத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றேன். அந்தவகையில் தான் உங்கள் அனைவரையும் இப்பத்திரிகையின் மூலமாக சந்திக்கின்றேன்.

எனது பொறுப்புக்களை என்னால் தட்டிக்கழிக்கமுடியாது என்ற காரணத்தால் என்னால் முடிந்தளவுக்கு வெளிநாட்டுத் தூதுவர்கள், வெளிநாட்டு அரசியல்வாதிகள், உள்ளூர் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பல்வேறு மதப் பெரியோர்கள் என அனைவரையும் சந்தித்து எமது மக்களின் இன்றைய தேவை குறித்து கலந்துரையாடியுள்ளேன். தொடர்ந்தும் அதே பணியில் ஈடுபட்டுக் கொண்டு வருகிறேன். எமது மக்கள் இடம்பெயர்ந்து

**தொடர்ச்சி 5ம் பக்கம்**

## தமிழக முதல்வருடன் சந்திப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி 02.03.2007 அன்று காலை கோபாலபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடினார். இன்றைய காலகட்டத்தில் இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இந்திய மத்திய அரசின் தலையீடு அவசியம் என்பதையும், இந்தியாவை தலையிட வைக்கக் கூடிய ஒரு தலைவர் தமிழக முதல்வர் என்பதையும் திரு. ஆனந்தசங்கரி அவர்கள் வலியுறுத்திக் கூறினார். இலங்கை தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் தனக்குப் பெரிதும் அக்கறை



உண்டென்றும், தனது பங்களிப்பை தவறாது வழங்குவதாகவும் முதல்வர் உறுதியளித்தார். மத்திய அரசிடமும் இவ்விடயம் குறித்துப் பேசுவதாகவும் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தெரிவித்தார்.

## மதகுருமார்களுடன் சந்திப்பு

தலைவர் ஆனந்தசங்கரி கடந்த 11.02.2007 ஞாயிற்றுக்கிழமை அதி. வணக்கத்திற்குரிய மல்வத்தை மகாநாயக்கதேரரையும், அதி. வணக்கத்திற்குரிய அஸ்கிரிய மகாநாயக்க தேரரையும் சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்புக்கள் தனித்தனியாக சுமார் ஒரு மணி நேரம் சுமுகமாக நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தந்தை செல்வாவின் கனவுகளை நனவாக்குவோம்**

உதயசூரியன்
Uthayasooriyan
උදය සූරියන්
E-mail: uthayasooriyan_sl@yahoo.com Tel : 0602135912

## எமது சிந்தனையில்

தமிழ்ப் பேசும் மக்களை உதயசூரியன் பத்திரிகை மூலம் மீண்டும் சந்திப்பதில் மிக்க மனநிறைவு கொள்கின்றோம். அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடிவுக்காக உழைக்க உருவான ஒரே தமிழ்க்கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி தன் கடமையை என்றும் தட்டிகழித்தமை கிடையாது. இலட்சியத்தை அடைவதற்கு தேர்ந்தெடுத்த நடைமுறை பற்றிய தெரிவால் எம்மினம் பல பின்னடைவுகளை சந்தித்துக் கொண்டு இருக்கிறது. ஒரு இன விடுதலைக்காக அல்லது தேசத்தின் விடுதலைக்காக நாம் தேர்ந்தெடுத்த வழிமுறை எம்மை எங்கே இட்டுச் செல்லும் என்பதை பல அனுபவங்கள் மூலம் அறிந்து கொண்டிருக்கின்றோம். இலட்சியத்துக்கு மேலாக வழி முறை தான் மிக முக்கியமா னதாக ஆசிய ஜோதி ஜவகர்லால் நேரு தம் அனுபவங்கள் மூலம் கூறியவற்றை நாம் மீண்டும் நினைவு கூர்கின்றோம். இந்திய விடுதலைப் போராட்ட காலங்களில் வன்முறை அல்லது நேரடிப் போராட்டத்தை வழிமுறையாகத் தெரிவு செய்து காணாமல் போன அவரது காங்கிரஸ் கட்சியினர்களை அவர் நினைவு கூர்ந்து சொன்ன வார்த்தைகளாக அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

அகிம்சை நடவடிக்கைகள் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆயுதம். தமிழ் மக்களின் முழுமையான விடுதலை தான் கட்சியின் இலட்சியம். கட்சித் தலைமைக ளுக்கு என்றும் இதில் வேறுபட்ட கருத்துக்கள் இருந்திருக்கக் கூடாது. பயங்கரவாதம் படுகொலைகள் என்றும் எமது வழிமுறை அல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக பயங்கரவாதத்தை நியாயப்படுத்து வதும் அல்லது பயங்கரவாதிகளை போற்றுவதாலும் அவர்களைக் காப்பாற்ற முயல்வதாலும் அகிம்சைக்கட்சி ஒன்று அதுவும் பயங்கரவாதத்துக்கு பலரை காவு கொடுத்த கட்சி தன் புனிதத்தை இனியும் இழக்க நாம் இடங் கொடுக்க இயலாது. கட்சிக்குள் அடாவடித்தனங்களை கண்டு கொள்ளாத போக்கும் பின்னடைவின் காரணங்களே. பல கட்சிகள் இணைந்து ஒரு கூட்டணியான கட்சி தன்னை இழந்து பல நடைமுறைகளை பின்பற்றி பலவாறு ஆவதை எண்ணி மனம் வேதனைப் படுகின்றோம். பயங்கரச் செயல்களை யார் செய்தாலும் அதை நாமும் சர்வதேசமும் ஏற்க முடியாது. தமிழ் பேசும் மக்களுக்கு இலங்கையில் இரு முனையில் பாரிய அச்சுறுத்தல் இருப்பதாக உணர்கின் றோம். தமிழர்கள் காணாமல் போதல், இனந் தெரியாதவர்களால் கொலை செய்யப் படுதல், விமானக் குண்டு வீச்சாலும், செல்வீச்சுக்களாலும் கொல்லப்படுதல், பிந்துனுவெவ படுகொலை, செம்மணியில் புதைபடுதல், கட்டாய ஆட்சேர்ப்பு,

கப்பம், வரி, பட்டினிச்சாவு, அகதியாக விரட்டியடிக்கப் படுதல், துணுக்காய்க் புதைகிடங்குகள், பூசாவிலும் வன்னியிலும் சிறைப் பட்டு சித்திரவதைப்படல், என்பன சிலவாம்.

கடல் கடந்த தமிழர் பயங்கரச் செயலால் உதவிய, உதவவேண்டிய தாய்நாட்டின் ஆதரவை இழந்து நிற்றல் எமது நிர்கதியான நிலை. திசை மாறிப் போனவர்களும் தேவையையும் கடப்பாட்டையும் உணர்ந்து சத்தியத்தின் வழி இணைவார்கள் என எதிர் பார்க்கின்றோம். தமிழ்பேசும் மக்களுக்காக குரல் கொடுப்பதுதான் எமது முதன்மையான கடப்பாடு. அதையே நாம் தொடர்ந்து செய்வோம்.

இலங்கையில் எமது இனம் துன்பப் பட்டு வாழ்நாள்களை வீணடித்துப் போவதைத் தவிர்க்க, எம் இனம் விடுதலை பெற தூய்மையான வழிமுறையை தேர்ந்து, அதன் மூலம் எம்மை சர்வதேசமும் அயல் நாடுகளும் ஏற்க வைத்து, எம் பலத்தைக் கூட்டி, தந்தை செல்வாவின் கனவை எம் வாழ் நாளில் நனவாக்குவோம்.

## ஜனாதிபதிக்கு கடிதம்

சுட்டுக்கொலைசெய்யப்பட்ட வாகரை இந்துக் குருக்களின் குடும்பத்துக்கு நட்டஈடாக வழங்கப்பட்ட ரூபா 50,000 மிகக்குறுகிய தொகை எனவும், அக்குடும்பத்துக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து அல்லது விசேட அமைச்சரவைத் தீர்மானத்துக்கமைய ஒரு கணிசமான தொகையை வழங்க வேண்டுமெனவும் கோரி கடிதம் ஒன்றை தலைவர் ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.

எதுவித குற்றமும் புரியாத சில அப்பாவிப் பொதுமக்கள் சந்தேகத்தின்பேரில் கைதாகி நீண்டகாலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இளைப்பாறிய நீதியரசர் ஒருவரின் தலைமையில் குழுவொன்றை நியமித்து ஒவ்வொரு சந்தேக நபர்களையும் விசாரித்து குற்றமற்றவர்களை அவரது சிபார்சின்படி விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் தலைவர் ஆனந்தசங்கரி, ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## இராஜதந்திரிகளுடன் சந்திப்பு

ஐ.நா சபையின் அரசியல் பிரிவின் உதவிச் செயலாளர் நாயகம் Angla Kane அவர்களை தலைவர் ஆனந்தசங்கரி கடந்த 9.2.2007ல் சந்தித்து எமது பிரச்சனைகள் பற்றி ஆராய்ந்தார்.

புளொட் அமைப்பின் தலைவர் திரு. த. சித்தார்த்தன் அவர்களும், தலைவர் அவர்களும் கடந்த 15.2.2007ல் பிரித்தானிய வெளிவிவகார உதவி அமைச்சர் Rt. Hon. Kim Howells அவர்களையும், ஐரோப்பிய பாராளுமன்றத்தின் வெளிவிவகார, மனித உரிமைகள், பாதுகாப்புக்குழுவின் உபதலைவர் Hon. Geoffrey Van Orden அவர்களையும் கடந்த 19.02.2007 இலும் சந்தித்து தற்போதைய அரசியல் நிலவரங்கள் பற்றி கலந்துரையாடினர்.

# வடக்கு - கிழக்கு இணைப்பு

## சம்பந்தப்பட்ட மக்கள் தீர்மானிக்கட்டும்

இனப்பிரச்சினைத்தீர்வுக்கு வடகிழக்கு இணைப்பு அவசியம் இணைக்கப்பட்ட வட கிழக்கு மாகாணத்தை பிரிப்பதற்கு தாங்கள் எடுக்கும் நடவடிக்கைக்கு எனது ஆட்சேபனை தெரிவிப்பதற்கு பொறுத்துக் கொள்ளுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன். இம் முயற்சி பற்றி வடகிழக்கு ஆளுநர் அறிக்கை மூலம் தெரிந்து கொண்டேன்.

வடக்கு கிழக்கு மாகாண இணைப்பு நியாயமானதா, நியாயமற்றதா என்பது பற்றி நான் விவாதிக்க வரவில்லை.

நான் வற்புறுத்தி கூறுவது அந்த நடவடிக்கைக்கு இது பொருத்தமான நேரம் அல்ல என்பதும் பிரதம அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் வழங்கிய உறுதி மொழிக்கு அமைய சம்பந்தப்பட்ட மக்களிடமே இப் பணியை விட்டுவிட வேண்டும் என்பதே. இந் நிகழ்ச்சியை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா அவர்கள் அரசியல் சாசனத்தின் ஆறாவது திருத்தத்துக்கு மேற்கொண்ட நடவடிக்கைக்கு ஒத்ததாகும்.

அவ்வேளை மிகப் பெரிய வகுப்பு கலவரம் ஏற்பட்டதும் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாக இல்லாத நேரமும் ஆகும். அன்று அந்த நிலைமையை தவிர்த்திருந்தால் இன்றைய நிலை முற்றுமுழுதாக மாறுபட்டு இருந்திருக்கும். அவருடைய செயல் மிதவாதிகளிடமிருந்த தமிழ் தலைமையை எடுத்து பல்வேறு தமிழ் ஆயுத குழுக்களிடம் ஒப்படைத்தவேளை அத்தனை குழுக்களும் அழிக்கப்பட்டு அல்லது ஆயுத பலத்தினால் தனியொரு குழு உருவாகியது. இன்று தாங்கள் எடுக்கும் நடவடிக்கை அத்தகையவொரு நிலைமை உருவாக வழிவகுக்கும். இதுதான் இன்றைய நாட்டின் அவசர தேவையல்ல - குறிப்பாக யுத்தத்தால் சீரழிந்திருக்கும் பகுதிக்கு.

சரியோ பிழையோ தமிழ் மக்களும் ஓரளவுக்கு இஸ்லாமிய மக்களும் தமது எதிர்காலம் ஒன்றுபட்ட வடகிழக்கு மாகாண இணைப்பிலேயே தங்கியுள்ளது எனக் கருதுகிறார்கள்.

இக்கட்டத்தில் இணைப்பை பிரிப்பது கிழக்கு மாகாண தமிழ், இஸ்லாமிய மக்கள் விரக்தியடைந்து வேறு வழியின்றி விடுதலைப் புலிகளின் கொடூர செயல்களை மறந்து அவர்களுக்கு பின் செல்ல வழி வகுக்கும்.

இந்த விடயத்தில் மக்களையே தீர்மானிப்பதற்கு தாங்கள் அனுமதிக்க வேண்டும். பிரச்சினைகளை சில தமிழ், முஸ்லீம் தலைவர்களோடும் கலந்து ஆலோசிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்

இனப்பிரச்சினை தீர்வுக்கு இந்த இணைப்பு அவசியம் எனக் கருதப்பட்டதாலேயே 17 ஆண்டுகளுக்கு முன்பு இவ்விரு மாகாணங்களும் இணைக்கபட்டன. அன்றைய இந்திய பிரதமர் கௌரவ ராஜீவ்காந்தி அவர்களே இந்த இணைப்பை முன்னின்று நடத்தியவர். இந்த 17 ஆண்டுகளும் வடகிழக்கு மாகாண நிர்வாகம் மிக சுமூகமாக நடந்து வந்தது. நிர்வாகத்தை அரசியல் கட்சிகளோ, அரசியல்வாதிகளோ இன்றி அரச ஊழியர்களே நடத்தி வந்தனர். இந்த 17 ஆண்டுகளும் அடிப்படை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்யக்கூடிய எவரும் இருக்கவில்லை. ஆனால் அதற்குரிய அவசியம் ஏற்படவில்லை.

விடுதலைப் புலிகள் இம் மாகாணங்களில் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டு வராமல் இருந்திருந்தால் அப்பகுதியில் வாழும் சகல சிங்கள, தமிழ், இஸ்லாமிய மக்கள் மிக மகிழ்ச்சியோடும், சமாதானமாகவும், அமைதியாகவும் வாழ்ந்திருப்பர்.

இப்போது சில கட்சிகள் அக் கோரிக்கையை முன்வைக்க நீதிமன்றமும் சாதகமான தீர்ப்பை வழங்கியது. மாகாணங்களை பிரிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியமில்லை. அதற்குப் பதிலாக விடப்பட்ட தவறுகளை பாராளுமன்றம் மூலம் நிவர்த்தி செய்ய முடியும். இந்த நாட்டை பல தடவைகள் ஆண்ட தேசிய கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசிய கட்சி இதற்கு முழு ஆதரவு தருவதாக உறுதியளித்துள்ளது.

இணைக்கப்பட்ட மாகாண சபைகள் எதுவித தடங்கலும், சவால்களுமின்றி 17 ஆண்டுகள் தொடர்ந்து இயங்கியமையால் அது சட்டவலு பெற்றுள்ளது. இந்த மாகாணங்களில் பிறந்தவர்களும், வளர்ந்தவர்களும் யாரும் தலையிட முடியாத அடிப்படை உரிமைகளை பெற்றுள்ளனர். இப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் தம் பிள்ளைகளையும் தூக்கிக்கொண்டு முறையான உணவோ, குடிநீரோ இன்றி தம் உயிரை காப்பாற்ற காட்டுப்

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு 27-12-2006 அன்று தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு. வீ. ஆனந்த சங்கரி வடக்கு - கிழக்கு இணைப்பை வலியுறுத்தி எழுதிய கடிதம்**

பாதைகளால் மழையையும் பொருட்படுத்தாது ஓடுகின்றனர். அவர்களுக்கு இப்பிரிவினையை ஆதரிப்பதற்கோ, எதிர்ப்பதற்கோ ஒரு சந்தர்ப்பம் அளிக்காது ஒருதலைப்பட்சமாக முடிவெடுப்பது நியாயமற்ற செயலாகும்.

பல்லாயிரக்கணக்கானவர்கள் தமது பல்வேறு சொத்துக்களை விட்டுவிட்டு கையில் அகப்பட்டதோடு வீட்டைவிட்டு ஓடுகின்றனர்.

இவர்கள் மீளவரும் போது எஞ்சிய சொத்துக்கள் இருக்குமோ என்பது சந்தேகம். பாதிக்கப்பட்டவர்கள் எல்லா மக்களுமே. இரு பக்கத்தாலும் ஏவப்படுகின்ற ஏவுகணைகளின் தாக்குதலுக்கு பயந்து செய்வதறியாது சிலர் பாதுகாப்பிடம் தேடி வள்ளங்களில் செல்லும் போது வள்ளம் கவிழ்ந்து கடலுக்குள் மாண்டுள்ளனர். பலர் கொல்லப்பட்டும் மிகப் பெருந்தொகையானோர் காயப்பட்டும் உள்ளனர். ஒழுங்கான உணவின்றி, பாதுகாப்பான உறைவிடமின்றி அகதிகள் முகாம்களில் வாழ்கின்றவர்களை பார்க்க பரிதாபகரமாகவும், கதைகள் சோகம் நிறைந்ததாகவும் உள்ளன.

தாங்கள் பிடிக்கும் கடிவாளத்தை சரிவர பிடிப்பீர்களேயானால் நீங்கள் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணுவீர்கள் என்பதே பொதுமக்களின் அபிப்பிராயமாகும். பிரபாகரனின் பிள்ளைகள் மற்றும் விடுதலைப்புலிகளின் தலைவர்களின் பிள்ளைகள் மிகப் பாதுகாப்பான இடங்களில் வாழ்கின்றனர்.

யுத்தப் பிரதேசங்களில் வாழும் ஏழைப் பெற்றோரும், பிள்ளைகளும் துன்பப்படுகின்றார்கள்.

மாகாணங்களின் பிரிவினையை கேட்பவர்களுக்கு இணைக்கப்பட்ட பகுதிகளில் பெரிதாக அக்கறையில்லை. பல்வேறு கோரிக்கைகள் கிளப்பப்படுவது சிறுபான்மை மக்களை வேதனைப்படுத்தவே. தாங்கள் இந்த நாட்டின் தலைவர் என்ற முறையில் சிறுபான்மை இனததவரின் நலனை பாதுகாக்க கடமைப்பட்டுள்ளீர்கள். வசதியான தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி பிற நாடுகளில் வசதியாக வாழ்கின்றார்கள். வசதியற்றவர்கள் விடுதலைப் புலிகளுக்கு பயந்து அகப்பட்ட பொருட்களுடன் வீட்டைவிட்டு வெளியேறி சிங்கள மக்கள் மத்தியில் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கின்றார்கள். வசதியுள்ள சில தமிழர்கள் பாதுகாப்பாக வாழவும், பிள்ளைகளுக்கு கல்வியூட்டவும், இந்தியா சென்றுள்ளனர். சிங்கள மக்களில் நம்பிக்கை வைத்துள்ள தமிழர்கள் சிங்கள மக்களுடன் அமைதியாக வாழ்வதை நீங்கள் காண்கிறீர்கள். அதுபோல் சிங்கள மக்களும் தமிழ் மக்கள் மீது நம்பிக்கை வைத்து தமிழர்களுடன் ஏன் வாழ சம்மதிக்கக்கூடாது? எமது மக்கள் அனைவரும் இன, மத பேதமின்றி, சகல உரிமைகளுடன் வாழ வேண்டுமென தாங்கள் விரும்பினால் வடகிழக்கு இணைப்பை பிரிப்பதை தொடரவிடாது உடன் நிறுத்தி தற்போதுள்ள நிலைமையை தொடர விட வேண்டும், நாட்டில் அமைதி திரும்பி, சகல மக்களும் தத்தமது வீடுகளுக்கு திரும்பும் வரை பிரிவினை சம்பந்தமான பொதுஜன வாக்கெடுப்பு நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும். அதுவரை நாட்டின் பாராளுமன்ற சட்டசபை மூலம் நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய சில நடவடிக்கைகள் எடுக்கலாம்.

இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசு ஒஸ்லோ, டோக்கியோ ஒப்பந்தங்களின் அடிப்படையில் தீர்வு காண்பதற்கு கட்டுப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்தி கூறுவதோடு வேறு ஏதாவது மாற்றுத்திட்டத்தை தமிழ் மக்கள் மீது திணிப்பதை நியாயமற்றதாக கருதுகிறேன்.

உலகின் பல நாடுகளிலும் வாழும் தமிழர்கள் தம் நாட்டுக்கு திரும்ப வந்து ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ், சிங்கள, முஸ்லீம் மற்றும் ஏனைய சிறுபான்மை மக்களோடு சந்தோஷமாக வாழ்வதையே விரும்புகின்றனர். 50 ஆண்டுகளாக அமுலில் இருந்த ஒற்றையாட்சி முறையின் கீழ் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண தவறிய பட்சத்தில் எமக்குள்ள எஞ்சியுள்ள ஒரேயொர வழி ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையை அமுல்ப்படுத்துவதே. சர்வதேச சமூகமும் உள்ளூர் தமிழர்களும் அதையே விரும்புகின்றனர். சர்வதேச சமூகம் நாட்டுப்பிரிவினையை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளாது என்பதை விடுதலைப் புலிகள் அறிவர். எனவே சமஷ்டி தீர்வை அவர்களும் ஏற்றுக்கொள்ள சம்மதிக்க வைக்க வேண்டும்.

**வீ. ஆனந்தசங்கரி**
**தலைவர் - த.வி.கூ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை தீர்வுக்கு மதத்தலைவர்களின் ஆதரவு கோரல்

**தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண மதத் தலைவர்களின் ஆதரவை வேண்டி தமிழர் விடுதலை கூட்டணி தலைவர் திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்கள் அனுப்பிய கடிதத்தின் தமிழாக்கம்**

59வது சுதந்திர தின விழாவைக் கொண்டாடும் நாமெல்லோரும் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு ஒருமித்துப் போராடிய சிங்கள, தமிழ், இஸ்லாமிய மற்றும் இனத்தவர்கள் என மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள் தனது சுதந்திர தினச்செய்தியில் குறிப்பிட்டிருந்தார். ஆகவே குறிப்பிட்ட ஒரு இனத்தவருக்கன்றி சிங்கள, தமிழ், இஸ்லாமிய, பறங்கிய, மலே உள்ளடக்கிய இலங்கையர்கள் அனைவருக்கும் இந்தப் பெருமை சேரும். 1948ஆம் ஆண்டு முதற்பிரதம அமைச்சராகிய அதி கௌரவத்திற்குரிய டி.எஸ். சேனநாயக்க அவர்கள் சுதந்திரம் பெற்றது மக்கள் மத்தியில் இன மத அரசியல் வேறுபாடின்றி அவர்களுடைய துன்பங்களைக் குறைத்து மகிழ்ச்சியைப் பெருக்கவே என ஜனாதிபதி அவர்கள் தமது செய்தியில் குறிப்பிட்டிருந்தார். இக்கூற்று 50 ஆண்டுகாலமாக மாறிமாறி ஆட்சி செய்த அரசுகள் இந்த அற்புதமான கொள்கையைப் பொருட்படுத்தாமல் செயற்பட்டதனால் நாடு சீரழிந்து மக்களுக்கு துன்பத்தைக் கொடுத்தது என ஒத்துக் கொள்கிறார் எனலாம். ஜனாதிபதி அவர்கள் அனைவரையும் ஒன்றுபடுமாறு விடுத்த வேண்டுகோளை இந் நாட்டின் சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை என்ற பேதமின்றி அனைவரும் வரவேற்று ஏற்றுக் கொண்டு, நாம் ஒன்றுபட்டிருப்பின் எமது நாட்டை மிக்க உச்ச நிலைக்கு உயர்த்த முடியும் என்ற கூற்றையும் ஆமோதிக்கின்றனர். நாட்டின் ஒருபகுதியினர் அதிருப்தியுடன் வாழும்போது ஒற்றுமையை ஏற்படுத்துவது கடினமாகும். ஆகவே அனைவரையும் ஒற்றுமைப் படுத்தின் நாமனைவரும் நமக்குள் உள்ள சில வேறுபாடுகளை மறந்து -எம்முள்ளத்தின் அடியில் தூங்கக்கொண்டிருக்கும் தேசப்பற்றைத் தட்டி எழுப்பி சுயநலம் தலைதூக்காது தவிர்ப்பது நல்லதாகும்.

நாட்டுப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தேசப்பற்றாளர்கள் அனைவரையும் தன்னுடன் சேருமாறு ஜனாதிபதி அழைப்பு விட்டவேளையில் இனப்பிரச்சனையே அவருக்கு முக்கியமானதாக தோன்றியிருக்க வேண்டும். இனப்பிரச்சனை நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் இடையூறாக இருப்பதை நாமனைவரும் அறிவோம். ஆனால் இத்தடை நீக்கப்பட்டால் எமது முன்னேற்றம் பத்துமடங்காகப் பெருகுவது மட்டுமன்றி, எமது வளங்கள் சரியாக உபயோகப்படுத்தப்படின் கற்பனைக்கெட்டாத அளவுக்கு எமது நாடு முன்னேறமுடியும். அனுபவரீதியாக நான் விளங்கிக்கொண்ட உண்மை எவர் தன்நாட்டையும் அந்நாட்டு மக்களையும் நேசிக்கின்றாரோ அவர் மட்டும் தான் தேசப்பற்றாளர் அல்லாது தன் நாட்டையும் தன் இனத்தவரையும் நேசிப்பவர் தேசப்பற்றாளர் இல்லை. இது தேசப்பற்றுமல்ல. பிரச்சனைகளைத் தீர்க்கவும் இத்தகையோரால் முடியாது. நான் என் நாட்டையும், அதன் மக்களையும் மிகவும் நேசிக்கிறேன். வேறு இனத்தவர்கள் மதத்தவர்கள் மீது எதுவித வேறுபாடும் காணவில்லை. எனது நாட்டில் வாழும் பல்வேறு இன மத மக்களில் எனக்கு ஒரு விரோதியும் இல்லை. ஒரு சமயம் பயங்கரவாதத்தை ஆதரிக்கின்றவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ என்மீது விரோதம் கொண்டிருக்கலாம்.

எனது ஞாபகத்திற்கு எட்டிய வகையில் எனது தாயாரின் சீலைத் தலைப்பில் பிடித்துக்கொண்டு தினமும் காத்திருந்த “பேக்கர் மாமா” (Baker Mama) தான் நான் முதல் முதல் சந்தித்த சிங்களவர் ஆவார். தினமும் கிராமத்தைச் சுற்றி வரும் அவர் தன்னால் தயாரிக்கப்பட்ட பல்வேறு தின்பண்டங்களுடன் சரியாக மாலை 4 மணிக்கு எனது வீட்டுவாசலில் வந்து நிற்பார். அவர் தயாரித்து விநியோகித்த பதார்த்தங்கள் இன்றைய பேக்கரிகளில் நான் காண்பதில்லை. அடுத்து நான் சந்தித்த சிங்களவர் எமது கிராம மக்கள் அன்போடும் மரியாதையோடும் மதித்த மருத்துவமாது ஆவார். அந்த நாட்களில் ஒரு கிராமத்திற்கு அல்லது ஒரு சில கிராமங்களுக்கு ஒரு மருத்துவமாது நியமிக்கப்படுவது வழக்கம். அப்பதவியை அநேகமாக சிங்களப் பெண்களே வகித்துவந்தனர். அதிகளவு மருத்துவ வசதிகளற்ற காலத்தில் இம் மருத்துவ மாதுக்களே பிள்ளைப்பேற்று மருத்துவ நிபுணர்களாக செயற்பட்டதோடு, அந்தக் கிராமத்தில் பிறக்கின்ற பிள்ளைகள் அனைவரும் இவர்களது மேற்பார்வையிலும், கவனிப்பிலும் பிரசவிக்கப்பட்டவரே. எங்களில் ஒருவராக எங்களுடன் வாழ்ந்த அவர் மக்களால் பெரிதும் போற்றப்பட்டவர். அவரது ஒரு தம்பியாரும் அங்கு வாழ்ந்த ஒரு இஸ்லாமிய வியாபாரியின் மகனும் எனது விளையாட்டுத் தோழர்கள்.

கௌரவ கலாநிதி. டபிள்யூ. தகநாயக்க அவர்களுடன் ஏக காலத்தில் ஆசிரியப் பயிற்சி பெற்ற எனது தந்தையார் ஒரு கிராமப் பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டபோது, அதுவரை காலமும் சிறுபான்மைத் தமிழருக்கு கல்விகற்க மறுக்கப்பட்ட அனுமதியை வாபஸ் பெறச் செய்தார். தனது கல்லூரியில் தமிழ் மாணவர்களுக்கு சிங்கள மொழி போதிக்க ஒரு பட்டதாரி பௌத்த குருவை ஆசிரியராக நியமித்திருந்தார். தனிச்சிங்களச் சட்டம் 1956ல் அமுலாக்கப்படும் வரை 100% தமிழ் மாணவர்கள் கல்விகற்ற பாடசாலைகளில் சிங்களம் போதிக்கப்பட்டு வந்தது.

சிறுவனாக இருந்தபோது இத்தகைய அனுபவங்கள் எனது இனம் மதம் என்ற வேறுபாடின்றி எவர்மீதும் எதுவித வெறுப்புணர்வின்றி வளர உதவியது. எதுவித இனபேதமின்றி நாமனைவரும் சகோதரர்கள் போல வளர்ந்தோம். இதேபோன்றுதான் தம்தம் பகுதிகளில் சிங்களவர்களும், இஸ்லாமியர்களும், ஏனைய இனத்தவர்களும் வாழ்ந்தனர். எனது இக்கூற்று தெற்கே வாழும் சிங்கள இளைஞர்களுக்கு ஆச்சரியத்தையும், வெளியுலகத் தொடர்பற்ற விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் தமிழ் இளைஞர்களுக்கு அதிர்ச்சியையும் கொடுக்கும். அவர்களின் வாழ்நாளில் ஒரு சிங்களவரைத் தன்னும் சந்தித்திருக்க மாட்டார்கள். அனேகர் புகையிரதத்தைப்பற்றி கேள்விப்பட்டிருப்பினும், ஒரு புகையிரதத் தைத்தானும் பார்த்திருக்க மாட்டார்கள். சிங்களவர் தம்மைக் கொடுமைப்படுத்துவதாகவும், பிரபாகரன் தான் தமது ரட்சகர் என்றும் சிந்திக்கும் அளவுக்கு அவர்கள் மூளைச்சலவை செய்யப்பட்டுள்ளனர்.

சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், மலேயர் வேறும் சில இனத்தவர்கள் மத்தியில் வாழும் ஒரு அரிய வாய்ப்பைப் பெற்றிருந்ததோடு சிங்கள, தமிழ், இஸ்லாம், மலே மாணவர்களுடன் இருந்து கல்வி கற்றிருக்கின்றேன். சிங்கள, தமிழ், இஸ்லாம், மலே ஆசிரியர்களிடம் கல்விகற்கும் வாய்ப்பைப் பெற்றிருந்த நான், சிங்கள, தமிழ், இஸ்லாம், மலே மாணவர்களுக்கு கல்வி போதித்திருக்கின்றேன். ஆகவே நான் ஒரு இனத்தில் வைத்திருக்கும் அன்பும், மதிப்பும், இன்னொரு இனத்தில் வைத்திருக்கும் அன்புக்கும், மதிப்பிற்கும் எதுவிதத்திலும் கூடியதோ அன்றி குறைந்ததோ கிடையாது. நான் சிறுவனாக இருந்தபொழுது மனப்பாடம் செய்த சேர். வோல்டர் ஸ்கொற் என்பவரால் இயற்றப்பட்ட “ஒரு நாடோடிக் கவிஞனின் கடைசிக் கவிதை” என்ற நாட்டுப்பாடலே, என்னை - எனது நாட்டை நேசிக்கத் தூண்டியது. நாட்டுக்காகவும், அதன் மக்களுக்காகவும், எத்தகைய தியாகத்தையும் செய்ய தயார் படுத்தியது. அக்கவிஞர் தனது கவிதையில் “இது என்னுடைய சொந்த நாடு” என்று தன் உள்ளே தன்னும், ஒரு தடவையேனும் கூறாத இதயமற்ற ஒருவன் உயிருடன் இருக்கின்றானா? என்று கேள்வி தொடுக்கிறார். அச்சிறுவயதில், முன்பு இலங்கை என அழைக்கப்பட்ட இன்றைய ஸ்ரீ லங்காவில் பிரஜைகள் அனைவரையும் இன மத பேதமற்று - இலங்கைத் தாயின் பிள்ளைகளாகவே நான் கருதிக் கணித்து வந்துள்ளேன். மனிதாபிமானத்தின் மீது நான் கொண்ட அபிப்பிராயமே நான் எத்தகைய ஆபத்தை எதிர்நோக்கிய வேளையிலும், எனது நாட்டை பழைய பிரபல்யமான நிலமைக்கு மீட்டெடுக்க உறுதி பூணவைத்தது. இலங்கையில் இரத்தம், சிந்துவது நிறுத்தப்பட்டு மக்கள் மத்தியிலுள்ள பயமும் பீதியும் விலக்கப்பட்டு, நாட்டிலே பூரண சமாதானம் நிலவவேண்டும். சிங்கள, தமிழ், இஸ்லாம், மலே மற்றும் ஏனைய சமூகத்தவர்கள் மீண்டும் ஒரு தடவை சமாதானமாகவும், அமைதியாகவும், சகல உரிமைகளும், சலுகைகளும், சமமாக அனுபவித்து ஒருவரை ஒருவர் மதித்தும், நேசித்தும் வாழ வேண்டும்.

நாம் மிரட்டியோ அன்றி பலாத்காரத்தின் மூலமோ சகல மக்களையும் ஒன்றுபடவைக்க முடியாது. அன்பையும், பரிவையும் காட்டுவதன் மூலமே மக்களை வென்றெடுக்க முடியும். இதுவே எமது சகல சமயங்களும் போதிக்கின்றன. மறுபிறப்பில் நம்பிக்கைகொண்ட நாம், இப்பிறப்பில் தமிழனாகப் பிறந்த நான், மறுபிறப்பில் ஒரு சிங்களவராக அல்லது இஸ்லாமியராக பிறக்கக்கூடும் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். எனவே ஒருவருக்கொருவர் நாம் பாகுபாடு காட்ட முடியாது.

அர்த்தமற்ற ஒரு போரினால் 70 அல்லது 80 ஆயிரம் பெறுமதிமிக்க உயிர்கள் பறிபோயின. மரணத்தையும், அழிவையும் தவிர வேறு எதையும் அடையாத ஒரு யுத்தத்தால் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள், 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிங்களவர்கள், இஸ்லாமியர்கள் விதவையாக்கப்பட்டுள்ளனர். இதைத்தவிர பல்லாயிரக்கணக் கானவர்கள் அநாதைகளாக, மன நோயாளர்களாக, அங்கவீனர்களாக, பார்வையிழந்தவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். பற்பலகோடி பெறுமதியான அரச, தனியார் சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக சகல இன மக்களில் ஒருவர்தானும், வீதியில் பயமின்றி நடக்கவோ, பஸ்ஸிலோ, இரயிலிலோ பிரயாணம் செய்யவோ, வேலை முடிந்து மீண்டும் வீட்டுக்கு திரும்பும் உத்தரவாதமோ இன்றி வாழ்கிறார்கள். இந்த நிலை கடந்த கால் நூற்றாண்டு காலம் நிலவிய போதும், திருப்தியுடன் மக்கள் வாழும் சமுதாயத்தில் பிரிவினைக்கு இடமில்லாத போதிலும், சிலர் நாடு பிரிந்து விடுமோ என்ற எண்ணத்தில் வாழ்கிறார்கள். தனது குடும்பத்தில் உயிரழிவோ, உடமையழிவோ அல்லது வேறு ஏதேனும் இழப்போ ஏற்பட்டிருப்பின் அத்தகைய ஒருவர் யுத்தம் தொடரவேண்டும் என்று கூறமாட்டார். யுத்தம் வேண்டி நிற்பவர்கள் இப் போரின் கொடூரத்தை அல்லது தாக்கத்தை உணரவேண்டுமாயின் - ஒருவரை இழந்த, விதவையாக்கப்பட்ட, அநாதையாக்கப்பட்ட, அங்கவீனரான, கண்பார்வையற்ற அல்லது மனநோயாளியாக்கப்பட்ட ஒருவரது குடும்பத்தைச் சென்று பார்வையிட வேண்டும். எனது குடும்பத்தில் 6 பேரை நான் இழந்ததோடு 3 விதவைகளும், சில அநாதைகளும் உருவாக்கப்பட்டிருக்கின்றனர். சிலர் நான் தைரியசாலி எனப் புழுகுகின்றனர். பயங்கரவாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டை நான் எடுப்பதற்கு எனது மனத்தைரியமல்ல, எனது நாட்டுக்கு ஒரு பிரஜை செய்ய வேண்டிய முக்கிய கடமையையே நான் செய்கிறேன்.

நாடு முழுக்க யுத்தத்தால் களைப்படைந்து, சமாதானத்திற்காக ஏங்குகிறது. ஆனால் திருப்தி கொண்ட ஒரு சமுதாயம் உருவாக்கப்படும் வரை சமாதானத்தை நாம் அடைய முடியாது என்பதை அனைவரும் உணரவேண்டும். ஆகவே சர்வதேச சமூகம் நாட்டில் நடப்பவற்றை மிகவும் அவதானமாக கவனித்துக் கொண்டிருக்கின்ற வேளையில் - எல்லாருக்கும் ஏற்புடையதாகிய ஒரு நியாயமான தீர்வை முன்வைக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளைத் தடை செய்த நாடுகள் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு, இலங்கை அரசு சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றன. மாவீரர் தினத்தை விடுதலைப் புலிகள் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் விமரிசையாகக் கொண்டாட அனுமதித்த -விடுதலைப் புலிகளைத் தடைசெய்த சில நாடுகள், அவர்கள் மீது விதித்த கட்டுப்பாடுகளைத் தற்போது தளர்த்துவது போலத் தெரிகிறது. ஒஸ்லோ மற்றும் டோக்கியோ உடன்படிக்கைகள் மூலம் ஒப்புக்கொண்டபடி ஐக்கிய இலங்கைக்குள் ஒரு சமஷ்டி முறையிலான தீர்வை சர்வதேச சமூகம் எதிர்பார்க்கிறது.

கடந்த 2, 3 வருடங்கள் எமது பிரச்சனை சம்பந்தமாக பல்வேறு சமயத் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், சில பிரதானிகள், ஐரோப்பா கனடா போன்ற நாடுகளில் இயங்கும் பல்வேறு இலங்கை அமைப்புக்கள் இந்திய முறையிலான அரசியலமைப்பை சமஷ்டி அமைப்புக்கு மாற்றாக ஏற்கத் தயாராக உள்ளனர். சமஷ்டி முறையையும், ஒற்றையாட்சி முறையையும் சிலர் விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் தனிநாட்டைத் தவிர வேறு எந்தத் தீர்வையும் விரும்ப மாட்டார்கள். சர்வதேச சமூகம் ஏற்று சிறுபான்மை மக்களுக்கு சிபார்சு செய்யக்கூடிய, விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய ஒரு நியாயமான தீர்வை முன்வைக்கும் பட்சத்தில் அது அரசுடைய நிலைப்பாட்டைப் பலப்படுத்துவதோடு, விடுதலைப் புலிகளைப் பலவீனமடையச் செய்யும். அத்தகைய ஒரு தீர்வையும் விடுதலைப் புலிகள் நிராகரிக்கும் பட்சத்தில் சர்வதேச சமூகம் என்ன மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாம் கூற வேண்டிய அவசியமில்லை.

பண்டைக்காலத்தில் மன்னராட்சி நிலவிய சகல நாடுகளிலும், சமயப் பெரியார்களிடம் ஆலோசனை பெற்று ஆட்சி நடத்தும் வழமை இருந்து வந்துள்ளது. நம் நாட்டிலும் மகா சங்கத்தினருடைய வழிநடத்தல் இருந்திருக்கிறது. இந்த விடயத்தில் எனது நிலைப்பாடு என்ன என்பதை ஜனாதிபதி அறிந்துள்ளார். ஜனாதிபதி அவர்கள் தனது சுதந்திரதின விழா உரையின்போது எனது பெயரைக் குறிப்பிட்டமை இனப்பிரச்சனையின் இறுதித் தீர்வுக்கு -எனது தீர்வையும் பரிசீலிக்கத் தயாராக இருப்பதை எடுத்துக் காட்டுகிறது. அவரது பேச்சு சமாதானத்தை அடையும் பணியில் நான் கொண்டுள்ள ஈடுபாட்டுக்கு உற்சாகத்தைத் தருகிறது. வாகரையில் ஜனாதிபதிக்கு மாலையணிவித்து கௌரவித்த ஒரு ஆலயத்தின் பிரதம குருவுக்கு நடந்ததுபோல இன்னொருவருக்கு இனிமேல் நடக்கக் கூடாது. இந் நாட்டிலுள்ள ஆண் பெண் அனைவரும் தம்மைத்தாமே கேட்க வேண்டிய கேள்வி என்னவெனில் - தமிழருடைய எதிர்காலம் நியாயமற்ற, கர்வம் கொண்ட, கொடூரமான ஒரு சிறு குழுவினரின் கையில் ஒப்படைக்கப்பட வேண்டுமா?

ஆகவே மகாசங்கத்தினரை மட்டுமல்ல நாட்டிலுள்ள பல்வேறு மதத் தலைவர்களையும் மிகவும் பணிவாக நான் வேண்டுவது -மனு நீதி அடிப்படையில் உருவாகியதுதான் மகிந்த சிந்தனை. அதனடிப்படையில் ஒரு பொருத்தமான தீர்வை ஜனாதிபதி அவர்கள் முன்வைக்க ஆலோசனை வழங்க வேண்டும். அவருடைய தீர்வு 50 ஆண்டுகாலமாக துன்பப்படும் மக்களுக்கு மீண்டும் அமைதியைக் கொடுக்கக்கூடிய ஒரு நிரந்தரத் தீர்வாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

## கொழும்பில் பாராட்டு விழா



யுனெஸ்கோ விருது பெற்றமைக்கு பேராதனைப் பல்கலைக் கழக கொழும்புக் கிளையின் வித்தியார்த்திகள் சங்கம் ஏற்பாடுசெய்த பாராட்டுக் கூட்டம் கடந்த 19.12.2006 அன்று மாலை 5.30 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பேராசிரியர் கார்லோ பொன்சேகா வாழ்த்துரை வழங்கிய இந்நிகழ்வில் அமைச்சர்கள் டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண மற்றும் மேல்மாகாண ஆளுனர் அலவி மௌலானா, சர்வோதயத் தலைவர் ஆரியரட்ண, முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனர் லயனல் பெர்னாண்டோ, திருமதி. மனோரி முத்தேட்டுகம மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியை செயலாளர் திரு.லலித் வீரதுங்க அவர்கள் கலந்துகொண்டு வாசித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருங்கால சந்ததியினருக்காக அமைதி, சமாதானம், அபிவிருத்தி பற்றி சிந்திப்போம்

**பாரிஸ் நகரில் உள்ள யுனஸ்கோ மண்டபத்தில் 16.11.06 அன்று சகிப்புத்தன்மையும் அகிம்சையும் மேம்படுத்துவதற்கான யுனெஸ்கோ மதன்ஜித் சிங் விருது வழங்கப்பட்டவேளை திரு.வீ.ஆனந்தசங்கரி அவர்கள் வழங்கிய ஏற்புரை**



சர்வதேச ஜூரர் சபையின் தலைவர் திரு அன்ரஸ் பாஸ்ரானா அறங்கோ அவர்களே, கௌரவ ஸ்ரீ மதன்ஜித் சிங் ஜீ அவர்களே, மேதகு பிரமுகர்களே, சீமாட்டிகளே, கனவான்களே!

ஆயுபோவன், உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம். இன்று இந்த நிகழ்ச்சியில் சமூகமளிக்க இயலாது போன யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் திரு. கொய்சிரோ மட்சூரா அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.

சகிப்புத்தன்மைக்கும் அகிம்சைக்கும் எனக்களிக்கப்பட்ட இந்த யுனெஸ்கோ மதன்ஜித் சிங் விருதானது தனிமனித சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு நான் மேற்கொள்ளும் போராட்டத்திற்கும் அகிம்சையை பேணுவதற்கு எனக்குள்ள ஆர்வத்திற்கும் கிடைத்த ஒரு கௌரவமாக கருகின்றேன்.

மகாத்மா காந்தியிலிருந்து மார்ட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா வரை தமது இதயங்களில் அமைதியை நோக்காக கொண்டே தமது மக்களின் உரிமைகளுக்காக போராடினார்கள். அவர்கள் அடைந்த வெற்றியானது ஜனநாயக ரீதியாகவும், சாத்வீக வழிகளிலும் இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களின் உரிமைகளுக்காக போராடும் எனது சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் பெரும் ஊக்குவிப்பாக இருந்தது என்று கூறலாம்.

சகிப்புத்தன்மையின்மையும், பிரிவினை வாதமுமே ஒருவரிலிருந்து இன்னொருவரைப் பிரித்து இனவாதக் கோட்பாடுகளுக்கு வழிவகுத்தன என்பதை நான் இங்கு முதற்கண் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ஒருவர் வேற்று மொழியை பேசுபவராகவும், வேற்று மதத்தை பின்பற்றுபவராகவும், வேறொரு நிறம் கொண்டவராகவும் இருக்கலாம். எனினும் அத்தகையோர் பற்றிய புரிந்துணர்வு இன்மையே உலகளாவிய ரீதியில் முரண்பாட்டுகளுக்கான மூல காரணம் என இங்கு குறிப்பிடலாம்.

மனிதர்களுக்கிடையேயோ, சகோதரர்களுக்கிடையேயோ தோன்றும் பிரச்சினைகள் வன்முறைகளுக்கு இட்டுச் செல்லப்படுவதை நான் கண்டுள்ளேன். ஒரு குழந்தையை போட்டி மனப்பான்மையுடனேயே வளர்க்கின்றோம். வாழ்க்கை எத்தகைய அழகியதொன்றெனக் காட்டுவதை விடுத்து பொருளும், செல்வமும், அதிகாரமும் முக்கியமானதென நாம் அவர்களுக்குப் புகட்டுகின்றோம். வாழ்க்கை என்பது சகல பொருட்களையும் கொண்ட ஒரு பெரும் சந்தையைப் போன்றது. அவை யாவற்றையும் பணமிருந்தால் எம்மால் வாங்கிக்கொள்ள முடியும். எனவே அதிக மகிழ்வினை பெறுவதற்காக முடிந்தளவு பொருட்களை வாங்குவதற்கு தேவையான பணத்தை அடைவதே வாழ்வின் நோக்கமாக இருக்கிறது. அந்த முறையில் சில விதிகளை மீற நேரிட்டாலோ, சில நண்பர்களை புண்படுத்தினாலோ அது பெரிதாக கருதப்படுவதில்லை. அவை எம்மிலோ நாம் அவற்றிலோ எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தமாட்டா. எனவே "அனைவரின் தேவைக்கும் உலகில் இடமுண்டு. ஆனால் அனைவரின் பேராசைக்கும் உலகில் இடமில்லை" என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அதிகாரப் போட்டியிலும் இதே உதாரணம் பொருந்தும். வாழ்க்கை என்பது பகிர்ந்து கொள்ளப்படுவதேயன்றி மேலதிகமாக எடுத்துக் கொள்வதற்கல்ல. ஆளுவதை விடுத்து சேவை புரிவதற்கும், வெறுப்பை விடுத்து அன்பு செலுத்துவதற்கும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் நண்பர்களாக. ஒரு குடும்பத்தவர்களாக, ஒரு நாட்டின் பிரஜைகளாக, இந்த பூமித்தாய் பெற்ற புதல்வர்களாக ஒருமித்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

சுயநலமிக்க செயற்பாடுகளும் ஆட்சி புரிவோரின் குறுகிய தன்னிச்சையான கொள்கைகளும் சமாதானத்தையும், சகிப்புத் தன்மையையும், அகிம்சையையும் மேம்படுத்துவதற்கு தடையாக உள்ளன. எனினும் கல்வியானது சமாதானம் மற்றும் சுதந்திரத்தை கட்டியெழுப்புவதற்கான அத்திவாரங்களான மனித உரிமையையும் மாண்புகளையும் மதிப்பதற்குமான ஒரு பாரிய சந்தர்ப்பத்தை எமக்கு தருகிறது.

ஒரு முன்னாள் ஆசிரியன் என்ற வகையில் சமாதானத்திற்கான கல்வி என்பது வாழ்வுக்கான கல்வி என நான் நம்புகின்றேன். எனவே கல்விக்கான ஒரு முதன்மை நிறுவனம் என்ற வகையில் ஜனநாயகம், நல்லாட்சி, சகிப்புத்தன்மை, மனித உரிமைகள், கருத்துச் சுதந்திரம் அனைவருக்கும் நீதி ஆகியவற்றை முன்னெடுத்துச் சென்று எமது சந்ததியினர் இந்த அதியுயர் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறு நான் யுனெஸ்கோ நிறுவனத்தை வேண்டிக் கொள்கின்றேன்.

ஜூரர் சபையின் மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு பிரதி பணிப்பாளர் நாயகம் அவர்களே, மாண்புமிகு ஸ்ரீ மதன்ஜித் சிங் அவர்களே, மேதகு பிரமுகர்களே!

இன்று உலகெங்கும் நிகழும் வன்முறைகள் பற்றியும் குறிப்பாக எனது சொந்த நாடான இலங்கையில் நிகழும் வன்முறைகள் பற்றியும் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன்.

பொதுவாக எல்லா வன்முறைகளும் "மனித உரிமைகள் மீறல், அநீதி, சகிப்புத்தன்மை அற்ற நிலை, பாரபட்சம் காட்டப்படுதல்" ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஒருவரின் உரிமைக்காக போராடுவதில் எவ்வளவுதான் நியாயங்கள் இருப்பினும் வன்முறையென்பது மேலும் வன்முறைக்கே வித்திடும் என்பது அனைவரும் ஏற்றுக் கொண்ட ஓர் உண்மையாகும். ஒரு முறை வன்முறை ஆரம்பிக்கப்பட்டால் அது வெறுப்பு, அவநம்பிக்கை என்பனவற்றை உருவாக்கி அது நீண்டதோர் போராட்டமாக மாறக்கூடியது. அதுமட்டுமன்றி வன்முறையாளர்கள் மிகவும் பலம் பெற்றவர்களாகவும் மாற்றி விடுவதோடு அவர்கள் வழமைக்கு திரும்புவதென்பது இயலாததொன்றாகிவிடும். அவர்கள் தங்கள் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக ஆயுதக் கடத்தல், போதைப் பொருட்கள், நிதி சேகரிப்பு ஆகிய முயற்சிகளில் ஈடுபடுவர். இது ஒரு பெரும் தொழிலாகி இதனை நிறுத்துவதென்பது இயலாத ஒன்றாகிவிடும். இதுவே இன்று இலங்கையில் நடக்கிறது. ஒருபுறம் எம்போன்ற சில நடுநிலையாளர்கள் பொது மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக ஜனநாயக ரீதியில் போராடிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் இலங்கையிலுள்ள தமிழ் சமுதாயத்தின் பெரும்பாலாரின் கருத்தைப் பிரதிபலிக்காத தமிழீழ விடுதலைப் புலிகள் என்று தம்மை கூறிக்கொள்ளும் ஆயுதக் குழுவொன்று தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழ் மக்களை பிணைக் கைதிகளாக வைத்திருப்பதோடு மட்டுமன்றி தமது பயங்கர வாதத்தால் முழு நாட்டையுமே திகிலுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

இவர்கள் தமிழ் மக்களை விடுவிப்பதாக கூறிக்கொண்டு பெற்றோர்கள் ஏதும் செய்ய இயலாது இருக்கும் நிலையில் அவர் தம் பிள்ளைகளை வலுக்கட்டாயமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடுத்துகின்றனர். இந்த அப்பாவிச் சிறுவர்கள் தீவிரவாதக் கோட்பாட்டாளர்களால் மூளைச் சலவை செய்யப்பட்டு தற்கொலை குண்டு தாரிகளாகவும், பீரங்கிக்கு இரையாகவும் மாறுகின்றனர். அதே நேரத்தில் அவர்களின் குழந்தைகள் இவ்வாறு வலுக் கட்டாயமாக தற்கொலை குண்டுதாரிகளாக மாற்றப்படாமல் வெளிநாடுகளில் பாதுகாப்பான வாழ்க்கை வாழ்கின்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, அவுஸ் திரேலியா, ஐரோப்பிய யூனியன், இந்தியா ஆகிய நாடுகளில் பயங்கரவாத இயக்கம் என தடைசெய்யப்பட்ட இந்த ஆயுதக் குழுவானது பிராந்திய தேசிய மட்டங்களில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல தலைவர்களை குறிப்பாக முன்னாள் இந்தியப் பிரதமர், முன்னாள் இலங்கை ஜனாதிபதி, தமிழரான முன்னாள் இலங்கை வெளியுறவு அமைச்சர், பல நடுநிலையான சிங்கள, தமிழ் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், பத்திரிகையாளர்கள் என்போரை கொலை செய்துள்ளது. இந்த பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது.

இது தவிர எழுபதாயிரத்துக்கும் அதிகமான போராளிகளும், அப்பாவி பொது மக்களும் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்திற்கு இரையாகி உள்ளனர். விடுதலைப் புலிகளின் இன சுத்திகரிப்பின் காரணமாக முஸ்லீம் மக்கள் வடக்கிலிருந்து அநீதியான முறையில் விரட்டியடிக்கப்பட்டனர்.

சுனாமியின் பின்னரும் தமிழ் மக்களை விடுவிப்பதாகக் கூறிக் கொள்ளும் இவர்கள் சுனாமி நிவாரணத்தை பகிர்ந்தளிப்பதற்காக ஒரு இணைந்த அமைப்பு வேண்டுமென கூறி அதன் நிமித்தம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டிய உதவிகளை தாமே அபகரித்து தமது கட்டுப்பாட்டில் வாழும் மக்களுக்கு உரிய முறையில் நிவாரணம் சென்றடையாமலும் செய்தனர்.

ஏ-9 என அழைக்கப்படும் வட பகுதியை இணைக்கும் வீதியின் ஒரு பகுதியாலேயே யாழ் குடாநாட்டுக்கு பொருட்கள் எடுத்துச் செல்லப்படும். அத்தனைப் பொருட்களுக்கும் கடுமையான வரி விதிக்கப்பட்டு வந்தமையால் உணவுப்பொருள், விவசாய சாதனங்கள் உட்பட சகல பொருட்களும் கூடுதலான விலைக்கே விற்கப்பட்டு வந்தன. இவ்வாறு சேர்க்கப்படும் பணம் புலிகள் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டிய ஆயுதங்களை பெறவே உபயோகிக்கப்பட்டது.

2001ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் மிக அதிக விருப்புரிமை வாக்குகள் பெற்று மாவட்டத்தின் முதல் பிரதிநிதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட என்னை எனது சொந்த தேர்தல் தொகுதிக்கும் செல்ல முடியாது தடுத்து எனது உயிருக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தினர். அதன் பின்னர் விடுதலைப் புலிகள் வட பகுதியில் வாழும் மக்களுக்கு வாக்குரிமையை மறுத்ததோடன்றி 2005ல் நவம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வடபகுதியைச் சேர்ந்த அனைத்து மக்களையும் வாக்களிக்கவிடாது செய்தனர். எனினும் நான் என் உள்ளம் ஏற்றுக் கொண்ட கருத்துக்களின்படி வாழ்வதிலிருந்து அச்சம் என்னை தடுக்கும் வயதினை தாண்டி விட்டேன் எனக் கொள்ளலாம்.

இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கும் ஏன் இந்த நாட்டிற்குமே இந்த அவலங்களை கொண்டு வந்த விடுதலைப் புலிகளின் அடக்கு முறைகளிலிருந்து இலங்கையிலுள்ள தமிழ் மக்களை மீட்டெடுக்க உதவும்படி சர்வதேச சமூகத்திடம் நான் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன். ஆகவே இந்த நாட்டு வருங்கால சந்ததியினருக்காக அமைதி, சமாதானம், அபிவிருத்தி ஆகிய விடயங்களையிட்டு நாம் மிகவும் தீவிரமாகவும் தாமதமின்றியும் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். இதனை அடைவதற்கு இங்குள்ள யதார்த்த நிலைகளை பூரணமாக அறிந்திருக்க முடியாத சர்வதேச சமூகத்திடமும் வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்களிடமும் நான் கேட்பது என்னவென்றால் வன்முறை வழிகளில் இந்த நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்களது அபிலாசைகளை பூர்த்தி செய்யவிளையும் பயங்கரவாத அமைப்பிற்கு நிதி மற்றும் உதவிகளை செய்ய வேண்டாம் என்பதேயாகும். வட கிழக்கில் கடந்த 25 ஆண்டுகளாக மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் எனது கூற்றுக்கு சான்றாக அமையும். அவர்கள் அற்ப காரணங்களுக்காக பேச்சுவார்த்தைகளையும் சமரசங்களையும் ஒதுக்கித் தள்ள விரும்புவார்கள். ஏனெனில் பேச்சுவார்த்தையின் பின் எடுக்கப்படும் இறுதித் தீர்வானது அவர்கள் இதுவரை காலமும் அடக்கு முறையின் பலனாக அனுபவித்து வந்த அதிகாரங்களையும் போதைவஸ்து, பயங்கரவாதம் மூலம் அவர்கள் பெற்று வந்த அதீதமான இலாபங்களையும் இல்லாது ஒழித்துவிடும்.



நிதி, அதிகாரம், கட்டுப்பாடு என அவர்கள் இதுவரை அனுபவித்து வந்த செல்வாக்குகள் அனைத்தையும் ஒரு சமரச தீர்வு இல்லாது ஒழித்து விடும். எனவேதான் வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்களையும், சர்வதேச சமூகத்தையும் இவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றேன்.

அதேநேரத்தில் இலங்கை அரசானது சிறுபான்மை மக்கள் ஏற்கக்கூடிய ஒரு சமஷ்டி அரசை முன்வைத்து அதிகாரப் பரவலாக்கலுக்கு வழிகோலும் தீர்மானத்ததை விரைவில் முன்வைக்க வேண்டும். இதுவே இலங்கை மக்கள் அனைவருக்கும் நிலையான தீர்வை வழங்கக்கூடிய ஒன்றாகும்.

மகாத்மா காந்தி அவர்களின் கூற்றுப்படி நேரம் ஒரு நெருக்கமுள்ள நண்பன். ஆனால் அதேநேரத்தில் நேரம் ஒரு இரக்கமற்ற எதிரியாகவும் மாறக்கூடும். நாங்கள் தக்க நேரத்தில் கருமமாற்றாவிடில் இலங்கையில் பிறக்கப் போகும் ஒவ்வொரு குழந்தையும் யுத்தத்தையும், பயங்கரவாதத்தையும், வெறுப்பையும் தவிர வேறொன்றையும் அறிந்திருக்க மாட்டார்கள். அடுத்த சந்ததியினர் இவ்வாறு அழியும் நிலையில் உள்ளனர். எனது இந்த கருத்திற்காக என்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். ஏனெனில் நானும் ஒரு மனிதனே.

சகிப்புத்தன்மையையும் சாத்வீகத்தையும் மேம்படுத்துவதற்காக எனக்கு கிடைத்த இந் அங்கீகாரத்தினையும் விருதினையும் மகிழ்வுடனும் அதேநேரத்தில் மிக மன அடக்கத்துடனும் ஏற்றுக் கொள்கின்றேன். இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்கள் ஒரு கௌரவம் மிக்க இனமாக சமாதானமான அகிம்சை வழிகளை பின்பற்றி தங்கள் உரிமைகளை வென்றெடுக்கும் வரை எமது போராட்டத்தை நானோ எனது ஆதரவாளர்களோ தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியோ கைவிடாது என நான் உறுதிபட கூறுகின்றேன். இவ்வாறு செய்தால் மாத்திரமே இந் நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லீம், பறங்கியர் ஆகிய பல்வேறு இன சமுதாயத்தை சேர்ந்த பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் "மீண்டும் ஒருமுறை இந்த நிலை வேண்டாம்", "நாங்கள் அனைவரும் ஒன்றே" எனக் கூறுவர். ▪

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜ.நா செயலாள..

1 ம் பக்கத் தொடர்ச்சி

கொலை என்று கூற முடியாது. அச் சந்தர்ப்பங்களில் எவர் செய்திருந்தாலும் பல்வேறு இன தலைவர்களும் எதுவித பாகுபாடு மின்றி அவ்வாறான சம்பவங்களை வன்மையாகக் கண்டித்து வந்துள் ளனர். விடுதலைப் புலிகளைத் தவிர இத்தகைய கொடூரங்களை வேறு எவரும் ஆதரிக்கமாட்டார்கள்.

விடுதலைப்புலிகளினுடைய கொடூரச் செயல்கள் தாங்கமுடியாத அளவுக்கு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளமையால் மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பி நிற்கின்றனர். உடனடி நடவடிக்கை யெடுக்கத் தவறின் பிரபாகரன் தமிழினத்தை பு'ண்டோடு அழிக்கின்ற வழிவகைகளை செய்வார். விடுதலைப் புலிகளின் கைமிலுள்ள அதிகாரம் அரசாங்கத்திடம் மாற வேண்டுமென்று மக்கள் விரும்புவதாக எனக்கு நம்பிக்கையான செய்தி கிடைத்துள்ளது. விடுதலைப் புலிகள் வாகரையில் படுதோல்வியடைந்ததின் பின் யாழ்ப்பாணத்தை எப்படியும் மீளக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆவலுடன் மக்களின் ஆதரவு வேண்டி தொந்தரவு செய்கின்றனர்.

1. *வீட்டுக்கு ஒருவரேனும் ஒவ்வொரு குடும்பத்தினரும் போராளியாக கையளிக்க வேண்டும்.*
2. *2006 ஆகஸ்ட்டுக்குப் பின்பு விவாகமானவர்கள் கூட போராளியாக சேர வேண்டும். அதற்கு முன்பு விவாகமானவர்களுக்கும், மாவீரர் குடும்பத்திற்கும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.*
3. *வெளிநாட்டில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்வோர் விடுதலைப் புலிகள் மூலமாகவே தொடர்பு கொள்ள வேண்டும். காலையில் அவர்கள் கொடுத்த விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு மாலையே தொலைத்தொடர்பு ஐந்து நிமிடத்துக்கு மட்டும் கிடைக்கிறது.*
4. *கையடக்க தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயற்சிப்பவர்கள் கைது செய்யப்பட்டு காலவரையறையின்றி தடுத்து வைக்கப்படுகின்றனர்.*
5. *18 வயதுக்கு மேற்பட்டவர்களையே போராளியாக சேர்க்கின்ற போதும் 18 வயதுக்குட்பட்டவர்கள் எங்கும் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.*
6. *வருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைகளை கூட கொண்டாடுவதில்லை.*
7. *மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ளவர்கள் கடத்தப்பட்டு நேரடியாக யாராக இருப்பினும் போராளியாக சேர்க்கப்படுகிறார்கள்.*
8. *க.பொ.த (சா.த) முதலாம் வருட மாணவர்கள் பயிற்சிக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.*
9. *பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைக்குக்கூட அனுப்பாது வீட்டில் பு'ட்டிவைத்து காவல் இருக்கின்றனர்.*
10. *பெற்றோர் எதுவித வேலைக்கும் செல்லாது பிள்ளைகளுக்கு காவல் இருப்பதிலேயே காலத்தை கழிக்கின்றனர்.*

விடுதலைப்புலிகள் கிளிநொச்சித் தொகுதியில் 10,000 இற்கு மேற்பட்ட இளைஞர்களை கடத்திச் சென்று, அதேபோல் அதே தொகையினரை முல்லைத்தீவு தொகுதியில் கடத்திச் சென்று எல்லோருக்கும் கட்டாயப்பயிற்சி அளிக்கின்றனர். மன்னார் வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து கடத்திவரப்பட்டவர்களும் பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தெளிவாக இப்போது புரியும் விடயம் என்னவென்றால் யாழ்ப்பாணத்தில் வெள்ளைவேனில் இளைஞர்களை கடத்துவதில் விடுதலைப்புலிகளுக்கும் பங்குண்டு என்பது தெளிவாகிறது. பகல்வேளைகளில் கடத்தப்படும் சம்பவங்களில் சந்தேகமின்றி விடுதலைப் புலிகளுக்கு தொடர்புண்டு. வேறு எவரும் பகல்வேளையில் ஆட்கடத்த துணியமாட்டார்கள். விடுதலைப் புலிகளின் பயிற்சிக்காலம் இரண்டு தொடக்கம் நான்கு வாரங்கள் மட்டுமே. பயிற்சிக்கு வராது முரண்டு பிடிப்பவர்களும், ஒத்துழைக்காதவர்களும் கடினமாக தாக்கப்படுவதோடு அவ்வாறு தாக்குகின்ற வேளையில் இறக்கின்றவர்களை கட்டித்தூக்கிவிட்டு தற்கொலையென சாயம் பு'சுகின்றனர்.

தற்போது புலிகள் கையாளும் தந்திரம் இரவாகி மக்கள் தூக்கத்துக்கு போகும்வரை காத்திருந்து வீட்டை பலாத்காரமாக உடைத்து தமக்கு வேண்டியவர்களை பிடித்துச் செல்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் பெற்றோரின் வேண்டுகோளுக்கிணங்க பிறிதொருநாள் தங்களிடம் கையளிக்க வேண்டுமென்று கூறி விடுதலை செய்கின்றனர். அவ்வாறு கையளிக்கப்படுகின்ற இளைஞர்களை சொந்த விருப்பில் வந்ததாக விளம்பரப்படுத்தி மேலும் ஆட்களைச் சேர்க்கின்றனர். பிள்ளைகளைப் பிடிக்கின்ற பொழுது கடுமையாக புலிகளுடன் முரண்படுகின்ற பெற்றோர்கள் வன்மையாக தாக்கப்படுகின்றனர். மனமுடைந்த, கோபமடைந்த மக்களின் ஏச்சுக்களையும், திட்டுக்களையும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை.

இதில் கூறப்படும் அத்தனைக்கும் நான் பொறுப்பேற்கிறேன். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இதுவரை வாழ்ந்தவர்கள் போதியளவு தியாகத்தை செய்து விட்டனர். அத்தகைய தியாககங்களை செய்ததற்கும் பொறுமையை கடைபிடித்து கஷ்டங்களை அனுபவித்ததற்கும் ஒரே காரணமாக இருந்தவர்கள் அவர்களுடைய பிள்ளைகளே. தற்போது வீட்டிற்கு ஒருவரை வற்புறுத்தி கேட்கின்றபோது அவர்களின் உத்தரவை மீறவும் அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்யவும் மக்கள் தயாராகி விட்டனர். தமது உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதம் தந்து தாங்கள் எதிர்நோக்கும் தம்மை விடுவிக்கும் பணியில் ஈடுபடுகின்றவேளை ஆத்திரமூட்டும் செயல்களை பொருட்படுத்தாது தம்மை விடுவிக்க நட்புறவுடன் செயற்படும் எந்த இராணுவத்துக்கும் வரவேற்பு ஒத்துழைப்பு கொடுக்க தயாராக உள்ளனர். தமிழ் ஊடகங்களும் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் யுத்தத்தை நிறுத்தும்படியும், யுத்தத்துக்காக சேர்க்கப்பட்ட பிள்ளைகளை விடுவிக்கும்படியும் விடுதலைப் புலிகளை கேட்கவேண்டும். அத்தோடு கிளேமோர், நிலக்கண்ணிகளை வெடிக்க வைத்து இராணுவத்தினரை கொல்லுகின்ற அதேவேளை புதைக்கப்படுகின்ற கிளேமோர் குண்டுகள் மூலம் அப்பாவி குழந்தைகள், பொதுமக்கள் பலியெடுப்பதை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு தூண்டவேண்டும். இதுவே விடுதலைப் புலிகளுக்கு விடுக்கப்படும் கடைசி அழைப்பென தமிழ் ஊடகங்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் விடுதலைப் புலிகளுக்கு மிகத் தெளிவாகக் கூறவேண்டும். இவர்கள் தமிழினம் பு'ண்டோடு அழிக்கப்படாது காப்பாற்ற பகிரங்கமாக செயற்பட வேண்டும். மக்களுக்கு மிக முக்கியமான இந்த விடயத்தில் யாரும் ஒளித்து விளையாடக் கூடாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் எதுவித தாமதமுமின்றி இனப்பிரச்சினைக்கான ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்தை அரசு முன்வைக்க வேண்டும் என்று உளப் பு'ர்வமாக கோருகின்றேன். அதேவேளை ஒற்றையாட்சியின் கீழ் சமர்ப்பிக்கப்படும் எத்தகைய தீர்வும் சிறுபான்மை இனத்தின் அபிலாஷைகளுக்கு அமையாது என்பதையும் வற்புறுத்திக் கூறி காலதாமதம் பாதகமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

# உதயமாகும் உதயசூரியன்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செய்தித்தாளாக உதயசூரியன் மீண்டும் ஒளிவிட முயற்சிகளைச் செய்த எமது மரியாதைக்குரிய தலைவர் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்களுக்கு முதல் நன்றிகள்.

அறிவியல் ஆவணப்படுத்தலில் பத்திரிகைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. தேடுவோருக்கு சம்பவங்களையும், நிகழ்வுகளையும் நேரடியாக பார்த்த ஒரு சாட்சியாகக்கூட பத்திரிகை நிருபர்கள் தமது செய்திகளை உண்மையாக எழுதி வந்திருக்கிறார்கள். ஆனால் இன்று கடந்த ஒரு தசாப்த காலமாக பத்திரிகைத் தர்மம் ஒரு தலைப்பட்சமாக - தன்னிச்சையாக - தான் கிரகிப்பவற்றையும், உண்மையல்லாத பொய்யான தகவல்களையும் வெளியிடும் தன்மை குறிப்பாக ஒரு சில தமிழ்ப் பத்திரிகைகளுக்கு சிலரைத் திருப்திப்புடுத்துவதற்காக பிரசுரிக்கப்படுகிறது. இதைவிடப் பெருந் துரோகத்தை ஒரு இனத்துக்கு வேறெவராலும் செய்ய முடியாது. தவறான ஒரு செய்திக்கு மறுப்புத் தெரிவித்தால் அதை வெளியிடுகின்ற தன்மையும் இல்லாமல் இருப்பதுதான் வேதனை. இதனால் எதிர்கால சமுதாயம் பிழையான தகவல்களைப் பெற பத்திரிகையாளர்களும், ஆசிரியர்களும் காரணமாக அமைகிறார்கள். இது தமிழ்ப் பேசும் சமூகத்திற்கு கேடாக அமையும் என அஞ்சுகிறேன்.

குமரன் பதிப்பகம் - தினகரன் பத்திரிகையில் தொடராக வெளிவந்த "தந்தை செல்வா - ஓர் அரசியல் வாழ்க்கைச் சரிதை" என்ற திரு. த.சபாரத்தினம் அவர்களின் கட்டுரைகளை தொகுத்து வெளியிட்டது. அதில் அவர் தன்னுரையில் "ஒரு நல்ல பத்திரிகையாளனின் பணி ஆய்வில் ஈடுபடுவதல்ல. அதைச் செய்ய நிறையப் பேர் இருக்கிறார்கள். பத்திரிகையாளனின் பணி, தான் மிக அருகே நின்று பார்த்தவற்றைப் பதிவு செய்து வைப்பதே. பத்திரிகையாளனுக்குக் கிடைக்கும் அந்த அருமையான சந்தர்ப்பம் ஆய்வாளர்களுக்கு கிடைப்பதில்லை. நான் நெருங்கியும் அதே நேரத்தில் விலகியும் நின்று அவதானித்தவற்றையும், அறிந்தவற்றையும்

**கடந்த ஒரு தசாப்த காலமாக பத்திரிகைத் தர்மம் ஒரு தலைப் பட்சமாக - தன்னிச்சையாக - தான் கிரகிப்பவற்றையும், உண்மையல்லாத பொய்யான தகவல்களையும் வெளியிடும் தன்மை குறிப்பாக ஒரு சில தமிழ்ப் பத்திரிகைகளுக்கு சிலரைத் திருப்திப்படுத்துவதற்காக பிரசுரிக்கப்படுகிறது. இதைவிடப் பெருந் துரோகத்தை ஒரு இனத்துக்கு வேறெவராலும் செய்ய முடியாது.**

**பாபுஜி**

இந்நூலில் பதிவுசெய்துள்ளேன். தந்தை செல்வாவை, வரலாற்றை அவர் பாதித்த பாங்கை, தமிழ்ப் பேசும் மக்கள் உணரவைக்கும் கடமை உணர்வுடன் இப்பணியைச் செய்துள்ளேன்." என்று முதற் பக்கத்திலேயே குறிப்பிடுகிறார். பத்திரிகைத்துறையில் மிகவும் முதிர்ச்சிபெற்ற இவரது அறிவுரை இன்றைய பத்திரிகையாளர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டாமா?

பத்திரிகையாளன் எழுதும் எதையும் கடமை உணர்வுடன் எழுதவேண்டும். கட்டுரைகள் வேறு. ஆனால், செய்திகள் - சம்பவங்கள் உண்மையாயிருக்க வேண்டும். பத்திரிகா தர்மத்தை மீறிய பெருமை சில பத்திரிகைகளுக்கு உண்டு. இதனால் நீதி மன்றம் வரை தொடரப்பட்ட வழக்குகளும் நிறைய உண்டு. எமது கட்சியின் வரலாற்றில் சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியர் - தந்தை செல்வா வளர்த்த இயக்கத்தையே திட்டித் தீர்த்தவர். அவரது நண்பர் - இன்று தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவர் - தந்தையை "காற்சட்டை காந்தி" என்று கூறியவர். இவர்கள் போன்றோர் இருப்பதால்தானோ என்னவோ தமிழருக்கு இன்று இந்த நிர்க்கதி ஏற்பட்டுள்ளது. தந்தையின் "கடவுள் தான் தமிழரைக் காப்பாற்ற வேண்டும்" என்ற தீர்க்கதரிசன வாசகம் இதனால் தானோ என என்மனதில் எழுகிறது.

நாம் அகிம்சையில் இன்றும் நம்பிக்கையுடையவர்கள். மகாத்மாவால் கையாளப்பட்ட அகிம்சை ஆத்மீகத்தை அடிப்படையாகக் கொண்டது. அதைவிட சக்திவாய்ந்த ஆயுதம் வேறு கிடையாது. இன்று நம்மை நாமே அழித்துக் கொள்ளும் ஒரு பயங்கர, விரும்பத்தகாத நிலை உருவாகி தொடர்ந்தபடியுள்ளது. இராணுவமோ, பொலிசோ ஒருவரைச் சுட்டுவிட்டால் பதறும் அல்லது பதட்டமடையும் நாம் எம்மவர்களால் எமது அப்பாவிமக்கள் கொல்லப்படுவதை ஏன் கண்டும் காணாததுபோல இருக்க வேண்டும். இந்நிலைபற்றி நாங்கள் நிச்சயம் சிந்தித்தே ஆக வேண்டும்.

அன்புமூலம் அகிம்சை வழியில் சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்றி ஒரே அணியாக திரண்டு குரல் கொடுக்க அனைவரும் உழைக்க வேண்டும். எமது கொள்கைளுக்கு அப்பாற்பட்டு ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கொள்கையை நியாயமற்ற முறையில் வலுக்கட்டாயமாகத் திணிக்க எம்மவர்கள் செய்த துரோகத்தனம், கூடியிருந்தே குழி பறித்த செயல். இது அநீதியானது.

இன்றைய வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மாத்திரமல்ல வெளியிலும் வாழும் தமிழ்ப்பேசும் மக்களின் விரக்தி வாழ்வில் - நாம் சிறிதுநேரம் ஒவ்வொரு வாசகரும் இந்த விடயங்களை அமைதியாக பகுத்தறிந்து பார்ப்பதுடன் ஏனையோருடன் பகிர்ந்துகொள்ளவும் வேண்டும். இதற்கு சந்தர்ப்பம் தந்து அடுத்த இதழில் தொடர்கிறேன்.


தற்போதுள்ள நிலைமையில் மாதமொருமுறை வெளிவரும் உதயசூரியன் விரைவில் இருவாரங்களுக்கு ஒருமுறை வெளிவரும். கட்டுரைகள், ஆக்கங்கள், ஆலோசனைகள் என்பவற்றை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

வருடச்சந்தா 160.00 ரூபா

**உதயசூரியன்**

இல: 30/1 B, அல்விஸ் பிளேஸ்,

கொழும்பு - 3.


## வாசகர்களுடன் ஒரு சில..

1 ம் பக்கத் தொடர்ச்சி

வெளிநாடுகளிலும், உள்ளூரிலும் அகதிகளாக வாழ்கின்றனர். கப்பலில் ஏறி அகதிகளாக சென்றவர்களில் சிலர் நடுக்கடலில் மடிந்தும் உள்ளனர். அதைவிடக் கொடுமை சராசரியாக நாளொன்றுக்கு 5 அப்பாவித் தமிழர்கள் வீதம் ஏதோ ஒருவிதத்தில் கொல்லப்படுகின்றார்கள். இந்த நிலை நீடித்தால் எமது இனம் சொந்த நாட்டிலேயே இல்லாமல் போய்விடும். எமது மக்கள் இழந்த சொத்துக்கள் ஏராளம். இவையெல்லாம் எமது மக்களால் மீண்டும் தேடிக்கொள்ள முடியாத சொத்துக்களே! எனவே எல்லோரையும் முற்று முழுதாக திருப்திப் படுத்தக்கூடிய வகையில் எவராலும், எந்தக் காலத்திலும் ஒரு தீர்வினைக் கொண்டுவர முடியாது என்பதனை முதலில் நாம் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். எமது மக்களின் நிம்மதியான வாழ்விற்கும், நிலையான சமாதானத்திற்கும் ஏற்ற ஒரு தீர்வினைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பதே எனது எண்ணம். உங்களின் ஒத்துழைப்புடன் என்னால் இதனை செய்ய முடியும் என நம்புகிறேன்.

சர்வதேச சமூகம் இலங்கையில் நாட்டுப்பிரிவினையை என்றும் அங்கீகரிக்கப் போவதில்லை என்பதை மிகவும்தெளிவாகப் பலதடவை எடுத்துக்கூறியுள்ளது. அதே போன்று இந்தியாவும் எந்தக் கட்சி ஆட்சியினைக் கைப்பற்றிய போதும் இதே கருத்தை வெளிப்படுத்தி வந்துள்ளது. பிரிவினையை மறந்து ஒன்றுபட்ட இந்தியாவை மனப்பூர்வமாக அங்கீகரித்து வாழும் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் பிரிவினை கோரிக்கை மீண்டும் முளைவிடுவதை இந்தியா என்றும் விரும்பாது. இதுதான் யதார்த்தம். இச்சூழ்நிலையில் நம்மக்களும், தமிழ் நாட்டு மக்களும் மகிழ்ச்சியுடன் ஏற்கக்கூடிய ஒரு தீர்வு - தமிழ் நாட்டு அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை ஒத்த தீர்வு - எமக்கு ஏற்புடையாயிருக்கும். இதை சிங்கள மக்களும் ஏற்பார்கள் என்பது எனது கருத்து.

எமது தலைவர்கள் பலர் ஆயுதம் தாங்கிய சிலரால் கொல்லப்பட்ட போதும், எமது கட்சி அகிம்சை முறையிலேயே தனது நடவடிக்கைகளை எடுத்துச்சென்றது. அந்தவகையில் எமது கட்சி அன்றும், இன்றும், என்றும் அகிம்சை முறையிலான வழிமுறைகளையே கையாண்டு வந்துள்ளது என்பதனை முதலில் அனைவரும் உணரவேண்டும். வடகிழக்கில் தமிழ்மக்களுக்கென உள்ள மிகப்பெரிய ஜனநாயகக்கட்சி எமது கட்சியே. இந்தக் கட்சியினை உருவாக்க தந்தை செல்வாவும், தலைவர் அமிர்தலிங்கமும், தலைவர் சிவசிதம்பரமும் பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அம்முயற்சியில் எனது பங்கும் நிறைந்திருந்தது இவ்வாறு உருவான கட்சியினை சிதைப்பதற்கெனவே சிலர் எம்மில் இருந்துள்ளனர் என்பதை எண்ணும் போது பெரும் வேதனையாக உள்ளது. வட-கிழக்கில் தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கோடு அரும்பாடுபட்டு உருவாக்கிய எமது கட்சி இன்று பல இன்னல்களை சந்தித்து வந்தாலும், அதன் தலைவர் என்ற முறையில் எத்தனை சோதனைகளையும் வேதனைகளையும் சந்திக்கவும் தயாராக உளளேன் என்பதையும் உங்களிடம் தெரிவித்துக் கொள்கின்றேன். எந்தவித பதவி ஆசையோ, சுயநல நோக்கமோ இன்றியே நான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். எத்தனை எதிர்ப்புக்கள் வந்தாலும், என்னை எவர் எவ்வாறு விமர்சித்தாலும், நான் கட்சியின் கொள்கைகளையோ அதன் செயற்பாடுகளையோ விட்டுக்கொடுக்க மாட்டேன் என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக் கட்சியினை எவ்வாறு உருவாக்கினோம் என்பது பலருக்குத் தெரியாது. அடுத்துவரும் இதழ்களில் எவ்வாறு என்ன நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது என்பதையும், அதற்காக எமது தலைவர்கள் பட்ட கஸ்ரங்களையும் உங்களிடம் பகிர்ந்து கொள்வதோடு, எம்மில் ஒரு சிலர் கூடவேயிருந்து கட்சியினை அழிப்பதற்கு செய்த சதிகளைப்பற்றியும் தெரிவிப்பேன்.

என்முயற்சிகளுக்கு அனைவரினது ஆதரவையும் நாடிநிற்கும்.

**வீ. ஆனந்தசங்கரி**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உலகம் உனக்கு தலைவணங்க கடமைப்பட்டுள்ளது

**த ஐலண்ட் தினசரி தனது செப்டம்பர் 15ம் திகதிய இதழில் திரு. வீ. ஆனந்தசங்கரி அவர்கள் பற்றி எழுதிய ஆசிரிய தலையங்கத்தின் தமிழாக்கம்**

சகிப்புத்தன்மையையும் அகிம்சையையும் கடைபிடித்து பேணியமைக்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. ஆனந்தசங்கரி அவர்கட்கு மிகவும் கௌரவம் வாய்ந்த மதன்ஜித்சிங் விருதை அளிக்க முன்வந்தமைக்கு யுனெஸ்கோ (UNESCO) நிறுவனத்தை நாம் பகிரங்கமாக பாராட்டவேண்டும்..

பயங்கரவாதிகளால் அச்சுறுத்தலுக்குள்ளான இந்த எழுபது வயதை தாண்டிய தலைவருக்கு இது ஒரு ஆறுதல் தரும் விடயமே. இலங்கையின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்ற ஆவலும் இனங்களுக்கிடையே நல்லெண்ணத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்ற அவரது முயற்சியும் உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அதேநேரத்தில் இந்த விருதானது அவரது சுயநலமற்ற அர்ப்பணிப்பை உலகிற்கு காட்டுவதாக அமைந்துள்ளது.

தமது ஆத்மாவை புலிகளுக்கு விற்காத மிகச் சில அரசியல்வாதிகளில் இவரும் ஒருவராவர். இவரின் அணுகுமுறையானது இனங்களுக்கிடையே சௌஜன்யத்தை ஏற்படுத்துவதில் அரிய பங்காற்றியுள்ளது. இத்தகைய எளிமையான பெரிய மனிதர் பேசும் போது முழு உலகமுமே கேட்கிறது. ஆனாலும், துர்ப்பாக்கியவசமாக அவர்கள் அதிக நாள் உயிரோடிருப்பதில்லை. திரு. ஆனந்தசங்கரி அவர்கள் அடிக்கடி விடுதலைப் புலிகள் மீதும் தீவிரவாத தென் இலங்கை அரசியல்வாதிகள் மீதும் விடுக்கும் கணைகள் அவரது ஆழ்ந்த அரசியல் அறிவை ஓர் தந்தைக்குரிய பாசத்துடனும் அக்கறையுடனும் வெளிப்படுத்துவது போல் அமைகிறது. பிரபாகரனிடம் நீங்கள் ஏற்கனவே யுத்தத்தில் தோற்றுவிட்டீர்கள் என்று கூறுவதற்கும் அதே சமயம் ஜே வி.பி யினரிடம் தமது நிலைப்பாட்டை தளர்த்தி இறுதித் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கமே ஒரு வழி என கூறுவதற்கும் அவரிடம் மாத்திரமே தைரியம் உண்டு.

ஒரு பிரச்சினையை அணுகும் பாங்கிலேயே ஒருவரின் இயல்பான தன்மை வெளிப்படு கிறது. தம்மைத் தாமே தலைவர் எனக் கூறும் பலர் பிரச்சினையி லிருந்து விடுபட வேண்டி நொண்டிச் சாக்கினை கூறி தப்பிச் செல்வதும் ஏனையோர் பல்வேறு தேவைகளினதும் வசதிகளினதும் நிமித்தம் தமது கொள்கைகளை அடகு வைப்பதும் நாம் சாதாரண வாழ்வில் காணக்கூடியதே. இத்தகைய வெட்கக் கேடான கோழைத்தனம் பொதுவாக வடக்கு கிழக்கில் மாத்திரமல்ல தெற்கிலும் இரு தடவைகள் ஏற்பட்ட கிளர்ச்சியின் போது குறிப்பாக இரண்டாவதாக (1987-1989) ஏற்பட்ட கிளர்ச்சியின் காலப் பகுதியில் நிலவிய பயங்கரவாதத்திற்கு, மேல் மட்டங்களிலிருந்து கூட பலர் ஆதரவு அளித்தனர். ஒரு சிறு பையனால் கொடுக்கப்பட்ட காகிதத் துண்டு டாக்டர்களையும், வழக்கறிஞர்களையும், பொறியியலாளர்களையும் மற்றும் ஏனைய தொழில்சார் வல்லுனர்களையும் பகல் நேர பகிஷ்கரிப்புக்களில் பங்குபற்ற வைத்தது, பல அப்பாவி மூளைகளை சிதறடித்த 'பையன்களை" பல கலைஞர்கள் தாமாகவே பாராட்டிப் பேசினர்.

மொனறாகலைக்கும் பெரகலைக்கும் வேறுபாடு தெரியாதோரும் வறுமைக் கோட்டிற்கும் துணிக் கோட்டிற்கும் வேறுபாடு தெரியாதோரும் ஜே.வி.பி அணியில் சேர்ந்தனர். "அவர்களோடு போராட முடியாவிட்டால் அவர்களோடு சேருங்கள்" என்பதே அவர்களின் தாரக மந்திரமாக இருந்தது. மிகச் சிலரும் அவர்களின் தலைவர்களுமே இத்தகைய நிலைகளை எதிர்க்கும் சக்தி படைத்தவர்களாக இருந்தனர்.

திரு ஆனந்தசங்கரி அவர்கள் பயங்கரவாதிகளின் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்வது மட்டுமன்றி அவர் ஒரு துரோகி எனக்காட்ட பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பிரச்சாரத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தார். திரு. நீலன் திருச்செல்வம் கொலையுண்டதற்கு முன்னரும் அவர் மேல் இத்தகைய முத்திரை குத்தப்பட்டது. பின்னர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் அதன் பின்னர் கேதீஸ்வரனுக்கும் இதே நிலையே ஏற்பட்டது. திரு ஆனந்தசங்கரி அவர்களும் இத்தைகய பல்வேறு அவமானங்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். எனினும் அவர்கள் தமது முயற்சியில் மிகவும் பரிதாபகரமாக தோற்றுவிட்டார்கள் என்றே கூற வேண்டும். திரு. ஆனந்தசங்கரி அவாகட்கு கிடைத்த விருதானது பயங்கரவாதத்தை நிராகரித்து இனப் பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வொன்றை காண்பதில் நம்பிக்கையுடையோருக்கு கிடைத்த வெற்றி என்றே கூற வேண்டும்.

காந்திய வழியிலான அகிம்சையையும் சகிப்புத்தன்மையையும் பின்பற்றியதற்காகவே திரு ஆனந்தசங்கரி அவர்கட்கு உலகம் இந்த அங்கீகாரத்தை கொடுத்துள்ளது. பாராளுமன்ற அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா கூறியது போல அடிப்பட்ட புலி மிகவும் அபாயகரமானது. திரு ஆனந்தசங்கரி அவர்களின் உயிர் எந்த நேரத்திலும் மிக ஆபத்தை எதிர்நோக்கிக் கொண்டுள்ளது. அவருக்கு அளிக்கப்பட வேண்டிய மிக உயரிய கௌரவம் அவர் சுதந்திர மனிதனாக உயிருடன் வாழ உறுதியளிப்பதேயாகும்.

இரண்டு தசாப்தங்களாக புரிந்து வந்த யுத்தத்தை விடுத்து இந்த பிந்திய கட்டத்திலாவது திரு. ஆனந்தசங்கரி அவர்களின் அறிவுபூர்வமான வார்த்தைகளை கேட்பது பிரபாகரனுக்கு மிக உசிதமான செயலாகும். இவ் விருதானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீளவும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு இடையறாது பாடுபடும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருக்குக் கிடைத்த சர்வதேச அங்கீகாரம் ஆகும். எமது பாராட்டுக்கள் ஐயா எனக் கூறி வாழ்த்துகிறோம். •



## சமாதான புறாவிற்கு விருது

ஆக்கம்: தமயந்தி

புறாவிற்கு விருதொன்று
பூவுலகம் அறிந்ததனால்
பூபாளம் பாடியது – இன்ப
பூச்சொரிந்து வாழ்த்தியது.

அண்ணன் தமிழர் கூட்டணித் தலைவன்
ஆனந்தசங்கரிக்கு சமாதான
மன்னன் என்றும் மாண்பு கொண்ட மனிதன் என்றும் சமாதான
"எண்ணம்" ஒன்றே ஏற்றம், எனக் கண்டு உலகம் வியக்கும்
வண்ணம் விருது அளித்தார் உலகோர்
பரிசளித்தார் பார் புகழ – தமிழன் தலை நிமிர.

கூட்டணியின் தலைவனாகி – கட்சியினை
குடும்பம் போல் காத்து வைத்தாய் – நான் பயந்த
கூட்டமைப்பு காரரெல்லாம் – உனக்கு
வேட்டுவைத்து வெளிச்சென்றார் – ஆனாலும்
நாட்டு மக்கள் பெருமை கொள்ள
நல்லதோர் நிலையடைந்தாய் – நன்மைக்காய் விருது பெற்றாய்.

பதவிகள் வந்தபோது விலகிக் கொண்டாய்
உதவிகள் செய்வதிலே உவகை கொண்டாய் – உன்
கதவுகள் திறந்து வைத்து கயவர்க்கும் வாழ்வு தந்தாய் – விருதுகள்
கதவுதனை திறந்தபோது கண்ணியமாய் பணிவு கொண்டாய்.

பயங்கர வாதத்தின் கொடுமையிலே
பகிரங்கமாகய் எடுத்துரைத்தாய் – ஓய்வின்றி
பகலிரவாய் இடித்துரைத்தாய் – உன் கருத்தால்
மயங்கிய மாற்றுத் தேச மக்களெல்லாம்
வழங்குகின்றார் விருதுகளை – உந்தன்
வளையாத நெஞ்சத்தை வாழ்த்துக்கின்றார் வணங்குகின்றார்.

உலகம் மதித்ததனால் உன் கொள்கைகளை
உயர்வாய் நினைத்ததனால் – உலகமே
உயர்ந்த விருது தந்து உள்ளம் மகிழ்கிறது
கலகம் செய்யும் கயவரெல்லாம்
கனலில் வீழ்ந்த புழுவானார் காற்றினிலே துரும்பானார்.

நாகரீகத் தொட்டிலாடும்
நகரமாம் பரிஸில் இன்று – தமிழர்
கோமகனார் சங்கரிக்கு
கொடுக்கின்றார் பரிசில் ஒன்று
சாகாத வரலாற்றில் உன்விருது
சான்றான நிகழ்வொன்றாய்
ஆகுதல் தான் கண்டனரே ! தமிழர்
ஆனந்தம் தான் கொண்டனரே!

அருகில் வந்துந்தன் கைகுலுக்கி, கைதட்டி
அனந்தம் கொள்ளத்தான் வசதியில்லை, வாய்ப்பில்லை
பெருகிவரும் பெருமையினால் பேரன்பு நெஞ்சத்தால்
உருகி நின்று வாழ்த்துகின்றோம்
உன் பெருமை பாடுகின்றோம்
துரை மகனே! உன் தூய பணி
தொடரட்டும் – தமிழர் வாழ்வு
துலங்கட்டும்.

வாய் பிளந்து வட்டமிடும் வல்லூறாய் பறக்கின்றார் – உயிர் மேயும்
பேய்களென கொடியவர்கள் கொலை செய்ய அலைகின்றார் – ஆனாலும்
தாய் அணைக்கும் பிள்ளையைப் போல சமாதான
தூய்மைகளைப் பேசி வந்த தூயவனே ! தமிழ்
தாய் பெற்ற பிள்ளைகள் நாம்
வாய் நிறைந்து வாழ்த்துகின்றோம் – வாழ்க நீ என்றென்றும்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

## மீள் எழும் சூரியன்

காரிருள் சூழ்ந்த எம் மக்களின் வாழ்வில் ஒளியேற்ற உதயசூரியன் மீண்டும் தனது கதிர்களை விரிக்கத் தொடங்கியுள்ளான். கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க காந்தியடிகளின் வழியை வரித்துக் கொண்ட எமது மூத்த தலைவர் திரு ஆனந்தசங்கரி அவர்களின் செம்மையறு சீர் வழிகாட்டலில் உதயசூரியன் இங்கு பிரசன்னமாகிறது.

தலைவர் ஆனந்தசங்கரி அவர்கள் மிகவும் இடர்மிகு காலத்தில் தமிழ் மக்கள் வார்த்தைகளால் வருணிக்க முடியாத வேதனைகளையும் சோதனைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் சரித்திரத்தின் முக்கியமான நாட்களில் எம் மக்களுக்கு தலைமை தாங்கி நிற்கிறார்.

தனது முதிய வயதிலும் நாம் எங்கே நிற்கிறோம், எங்கே செல்ல வேண்டும், எத்திசை செல்ல வேண்டும் என்பதை திண்ணிய நெஞ்சுடன் எடுத்துரைத்து நிற்கிறார்.

தமிழ் மக்களுக்கு உரிய அதிகார பகிர்ந்தளிப்பு நிகழ வேண்டும் ஜனநாயக சுதந்திரத்தை அடிப்படையாக கொண்ட வாழ்வு மலர வேண்டும் என்பதற்காக அவர் அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வருகிறார். பேரினவாதிகளால் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அவலங்கள் ஒருபுறமிருக்க தமிழ் மக்கள் மத்தியில் உருவான புலிகள் இயக்கம் இன்று ஒரு பேரழிவு சக்தியாக உருவாகியிருப்பது பற்றி அது சமூகத்தின் சகல விழுமியங்களையும் அழித்தொழித்து சமூகத்தை நடுத்தெருவிற்கு அழைத்து வந்திருப்பது பற்றி அவர் இடையறாது விமர்சித்தும் கேள்வி எழுப்பியும் வருகிறார். தமிழர்களின் குரல்கள் மௌனமாகப்பட்டுள்ள இச் சூழ்நிலையில் தார்மீக ஆவேசத்தின் குரலாக, தமிழ் மக்களின் மனச்சாட்சியின் குரலாக ஆனந்தசங்கரி அவர்களின் குரல் ஒலித்து நிற்கிறது.

உலக வரலாற்றில் பல சமூகங்களில் இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் சீர்குலைந்து சின்னாபின்னப்பட்டு மக்கள் நிர்க்கதிக்கு தள்ளப்படும் போது சமூகத்தின் முதிய அனுபவம் வாய்ந்த மனிதர்கள் சமூகத்திற்கு தலைமை தாங்கிச்சென்ற வரலாற்று உதாரணங்கள் பல இப்பூவுலகில் பல இருக்கின்றன.

எமக்கு அண்டையில் உள்ள தென்கிழக்காசிய நாடான மியன்மாரில் அங்சாங்சுகி என்ற பெண்மணி அங்குள்ள இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக பல தசாப்தங்களாக போராடி வருகிறார். அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். மியன்மார் மக்களின் மனச்சாட்சியின் குரல் அவர். ஜனநாயகத்தின் குரலான அவருக்கு பல சர்வதேச விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

கௌரவ ஆனந்தசங்கரி அவர்கள் இத்தகைய உலகத் தலைவர்களின் வரிசையில் உள்ளவர். இலங்கையில் முக்கியமானதொரு காலகட்டத்தில் வாழ்வின் சகல நம்பிக்கைகளும் சிதறடிக்கப்பட்ட ஒரு சமூகத்தில் நம்பிக்கயை ஒளியை ஏற்றி வைப்பதற்கான மகத்தான முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கிறார்.

இலங்கையின் சமூகங்களிடையே நல்லுறவை ஏற்படுத்துவதற்கான அவரது பங்களிப்பு சமகாலத்தில் குறிப்பிடத்தகுந்ததாகும். இலங்கையின் அனைத்து சமூகங்களைச் சேர்ந்தவர்களுமே அவர் மீது பெரு மதிப்பு வைத்திருக்கிறார்கள். பல்வேறு நாடுகளின் இராஜதந்திர வட்டாரங்களிலும் மிகுந்த மரியாதையுடனும் கண்ணியத்துடனும் வரவேற்கப்படுபவர் தலைவர் ஆனந்தசங்கரி.

அவரின் 60 ஆண்டுகால சமூக அர்ப்பண அரசியல் பணி கருதியும் அகிம்சைக்கும் சமாதானத்துக்குமான அவரது பங்களிப்பு கருதியும் ஐநா வின் உலகளாவிய கல்விக்கான ஸ்தாபனம் யுனெஸ்கோ அவருக்கு விருது வழங்கி கௌரவித்திருக்கிறது. பிரான்சின் தலைநகர் பாரிசில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட உலகளாவிய அறிஞர்கள் இராஜதந்திரிகள் குழுமியிருந்த அவையில் இந்த மதன்ஜீத்சிங் ஞாபகார்த்த விருது வழங்கப்பட்டது.

இத்தகைய சிறப்பம்சங்கள் பொருந்திய ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில் தமிழ் மக்களின் நலன்களில் அக்கறையுள்ள அனைத்து சமூக சக்திகளும் இணைந்து செயற்படுவதே ஜனநாயக வாழ்வொன்றை எமது சமூகத்தில் ஜனநாயகத்தை நிர்மாணிப்பதற்கான தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான ஏற்புடைய வழியாகும்.

தமிழ் மக்கள் மத்தியில் உருவான வன்முறை உள்நாட்டிலும் உலகளாவிய அளவிலும் பல அபகீர்த்திகளையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய அவலநிலை களையப்படுவதும் நாமும் நாகரீக உலகத்தின் பிரஜைகள் என்பதை நிலை நிறுத்துவதும் அவசியம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஆனந்தசங்கரி அவர்கள் இந்திய முறையை ஒத்த அதிகாரப் பகிர்வை வலியுறுத்தி வருகிறார்.

உலகளாவிய நிலைமைகள், பிராந்திய நிலைமைகள் உள்நாட்டு நிலைமைகளின் அடிப்படையில் தமிழ் மக்கள் ஆனந்தசங்கரி அவர்களின் கரங்களை பலப்படுத்துவது வரலாற்றின் தவிர்க்க முடியாத தேவையும், அவசியமும் ஆகும்.

சூரியன் தமிழ் மக்களின் வாழ்வில் ஒளியேற்ற தனது பயணத்தை ஆரம்பித்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சுலலித்த அச்சகத்தில் அச்சிடப்பட்டு 30/1B, அல்விஸ் பிளேஸ், கொழும்பு 03 இல் உள்ள த.வி.கூட்டணியினரால் வெளியிடப்பட்டுள்ளது.